

ஞானச்சுடர்
சந்நிதியான் ஆச்சிரமம்
பங்குனி
2023
303ஆவது மலர்
ஓம்
முருகா
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**அவாஎன்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றும்**
**தவாஅப் பிறப்பீனும் வித்து.**

பொருள் : எல்லா உயிர்களுக்கும் எக்காலத்தும் கெடாது வருகின்ற பிறப்பினை உண்டாக்கும் வித்து ஆசை என அறிவுடையோர் கூறுவர். (361)

**வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது**
**வேண்டாமை வேண்ட வரும்.**

பொருள் : ஒன்றை விரும்பவேண்டுமாயின் பிறவாமையை விரும்ப வேண்டும்; ஒரு பொருளையும் விரும்பாமையை விரும்பப் பிறவாமை உண்டாகும். (362)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*

**சின்னத்தங்கம்**



தெய்வத்துக்குத் தெய்வம் சிந்தையிலே தானிருக்க
வையகத்தி லேனலைந்தாய் - சின்னத்தங்கம்
வாட்டமெல்லாம் விட்டிடடி 01

ஆழித் துரும்பெனவே யங்குமிங்கு மாயலைந்து
பாரில் தவியாதே - சின்னத்தங்கம்
பார்த்து மகிழ்ந்திடடி 02

அங்குமிங்கு மெங்குமந்த ஆண்டவன் தானிருக்க
அங்குமிங்கு மலையாதே - சின்னத்தங்கம்
ஆடிப்பாடி மகிழ்ந்திடடி. 03

கங்குல்பகல் காணாத கருணைதனை வேண்டிக்கொண்டு
செங்கமல மடமாதே - சின்னத்தங்கம்
சீராக வாழ்ந்திடடி 04

ஆடம் பரமெல்லாம் அடியோடே நீக்கிவிட்டு
கேடறியாத் திருவடியைச் - சின்னத்தங்கம்
கிட்டநீ கண்டிடடி 05

வேடமொன்றும் போடாதே வீணருடன் கூடாதே
தேடவேண்டாந் திகைக்கவேண்டாஞ் - சின்னத்தங்கம்
சீவன்சிவன் ஆச்சுதடி 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3  சுடர் - 303

**2023** **பொருளடக்கம்** **பங்குனி**


| | | |
|---|---|---|
| எங்கே நிம்மதி | சி. நற்குணலிங்கம் | 01 - 04 |
| இறைவனுடன் நேரில்... | மூ. சிவலிங்கம் | 05 - 11 |
| தவமான நாடு அவம்போக... | கே.எஸ். சிவஞானராஜா | 12 - 14 |
| திருமூலர் தவமொழி | ஆ.தா.இ. ஜெயபாலன் | 15 - 18 |
| திருநீறு | செ. ஜடா | 19 - 20 |
| ஆனந்தசாகரம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 21 - 23 |
| வர்ண சாஸ்திரங்கள் | இராம. ஜெயபாலன் | 24 - 25 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 26 - 27 |
| ஆசையும் அவலமும் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 28 - 29 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 30 - 33 |
| இறவாத புகழுடைய... | முருகவே பரமநாதன் | 34 - 36 |
| ஓங்காரநாடி என்னும் சுழுமுனை | கு. சிவபாலராஜா | 37 - 41 |
| வேண்டும் எனும் சொல்லிற்... | ஆ. விநாயகமூர்த்தி | 42 - 43 |
| மாதோட்ட மன்னவனே... | திருமதி தி. இந்திரா | - 44 |



**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

**தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406**

**அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்**

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

# மாசி மாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினூடாக கடந்த 25 வருடங்களாகவும் மாதமொருமுறை வெளியீடு செய்யப்பட்டுவரும் ஞானச்சுடர் மலருக்குரிய மாசி மாத வெளியீட்டுரையினை சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகாலத் தொடர்பில் உள்ளவரும், தொடராக வருடா வருடம் மாசி மாத மலருக்குரிய வெளியீட்டுரையினை ஆற்றிவருபவருமாகிய இளைப்பாறிய ஆசிரியை திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள் நிகழ்த்தினார்கள்.



அவர் தம் ஆரம்ப உரையில் நாட்டில் ஏற்பட்ட கொரோனா நோய்த் தாக்கத்தின் காரணமாக ஆச்சிரமம் ஆற்றும் பணிகள் யாவும் முடங்கிவிடுமோ என்ற எண்ணத் துடன் ஞானச்சுடர் மலர் வெளியீடும் தடைப்பட்டுவிடுமோ என்ற அச்ச உணர்வு எம்மிடம் தலைதூக்கி இருந்தது. ஆனாலும் மாதம் தவறாது வெளிவந்துகொண்டிருந்த ஞானச்சுடர் மலர் காலம் பிந்தி வந்ததோடு ஆச்சிரம பணிகளும் தங்கு தடையின்றி நடைபெறுவது சந்நிதி வேலவனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரருள் என்றே கூறவேண்டும் என்று கூறியதோடு தொடர்ந்தும் இம்மலர் பிரகாசிக்கவும் ஆச்சிரம பணிகள் மென்மேலும் சிறந்து விளங்கவேண்டும் அதற்கு மூலகாரணமாக விளங்கும் சந்நிதி வேற்பெருமானை நாம் அனைவரும் பிரார்த்திப்போம் என்றதுடன் தனது உரையை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

மாசி மாத ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையினை வழமையாக ஆற்றிவரும் யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் சமூகமளிக்காத வகையில் ஆச்சிரம பேரவை உறுப்பினரும் இளைப்பாறிய அதிபருமாகிய திரு ஆறுமுகம் சிவநாதன் அவர்கள் மலருக்குரிய மதிப்பீட்டுரையினை ஆற்றினார்கள்.



கொரோனா நோய்த் தாக்கத்தின் காரணமாக இம்மலர் மாதம் பிந்தி வந்தாலும் இவ் வருடம் ஆரம்பம் முதல் அந்தந்த மாதத்திற்குரிய மலர் வெளியீடு செய்யப்படுவது ஆச்சிரமம் சார்ந்தோரின் விடாமுயற்சி என்றே கூறவேண்டும். அவ்வகையில் இம் மலர் வெளியீட்டுடன் ஆச்சிரமப் பணிகள் யாவும் சிறந்து விளங்குவதற்கும் காரணம் சந்நிதி வேலவனது அருளாட்சி இங்கே வியாபித்துள்ளதை நாம் கண்களால் காணவும் விளங்கிக்கொள்ளவும் முடிகிறது.

மேலும் ஞானச்சுடர் மலரில் இடம்பெற்றிருந்த கட்டுரைகளில் உள்ள கருத்துக்களை சபையில் இருந்த அடியார்களுக்கு விளக்கிக் கூறியதோடு தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

மனிதனை மாண்புற வாழ வழிகாட்டுவதே மதங்கள் ஆகும். அன்பு, கருணை, பரோபகாரம், விட்டுக்கொடுக்கும் தன்மை, உன்னைப் போல் பிறரையும் நேசி போன்ற ஒழுக்கங்களையே எல்லா மதங்களும் போதிக்கின்றன. ஆனால் இன்று மதவெறி பிடித்து மதபோதனைகளைப் பின்பற்றாது வாழும் மதவாதிகளே மேலோங்கி நிற்கின்றமை வேதனைக் குரிய விடயமாக அமைகின்றது. கடவுளை ஏற்றுக்கொள்ளாத பௌத்தமதம் மனிதன், மனதை மேம்படுத்தி போதிசத்துவ நிலையை அடைய வேண்டுமென்பதையே வலியுறுத்தி நிற்கின்றது.

அண்மையில் பாகிஸ்தானில் மதவெறியர்களால் இலங்கைப் பொறியியலாளர் ஒருவர் தமது மதத்தை அவமதித்துவிட்டார் என்று அடித்துக் கொலை செய்தமை எமக்கு எவ்வளவு சோதனையையும் துன்பத்தையும் கொடுத்தது என்பது நாமறிந்த உண்மை.

இவ்வகையில் பன்னெடுங்காலம் இலங்கையில் வாழும் சைவ சமயத்தவர்களின் வழிபாடுகளை ஆட்சியாளர்கள் அழித்தொழித்துவர முயற்சித்தமை கசப்பான கடந்தகால வரலாறு ஆகும்.

அன்பை போதித்த மதங்கள் வன்பை நாடுவது கண்டிக்கப்பட வேண்டிய விடயங்கள் ஆகும். இவ்வகையில் இலங்கையிலும் அண்மைக் காலத்தில் சிவ சின்னங்களை, வழிபாடுகளை சிதைப்பதற்கான செயற்பாடு கள் மறைகரங்களால் முன்னெடுக்கப்படுவது வேதனைக்குரியதாகவும் கண்டிக்கப்பட வேண்டியதாகவும் உள்ளது.

எனவே மனக் கண்களைத் திறந்து மனிதன் மாண்புற வாழ்வதற்கு அனைத்துத் தரப்பினரும் உள சுத்தியுடன் செயற்பட வேண்டுமென்பதை சுடர் வலியுறுத்தி நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச. தங்கராசா J.P.
(ஒஸ்காவீதி, உரும்பராய் தெற்கு)
க. மணியன்
(புத்தூர்)
வ. துரைராசா
(ஒஸ்காவீதி, உரும்பராய் தெற்கு)
சி. தவலிங்கம்
(பருத்தித்துறை)
சபா இரத்தினசிங்கம் J.P.
(சபா றேடர்ஸ், அச்சுவேலி)
V. பரமானந்தம்
(முன்னாள் பொது முகாமையாளர் - தொண்டைமானாறு)
K. கேதீஸ்வரநாதன்
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
சு. மகேஸ்வரன்
(மாரியம்மன் மோட்டோர்ஸ், கோப்பாய்)
தம்பிப்பிள்ளை குணரட்ணம்
(சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி)
S. திருவாஞ்சீஸ்வரன்
(V.S.K. மானிப்பாய்)
த. விவேகானந்தராசா
(டச்றோட், சித்தங்கேணி)
அ. கோணேஸ்கரன்
(தில்லையம்பதி, கோண்டாவில்)
இ. சந்திரசேகரன்
(மாசியப்புலம் வீதி, ஏழாலை)
ஜெ. ஜெயப்பிரதாப்
(சாவகச்சேரி)
சி. அழகேசன்
(வட்டுவினி அம்மன் கோவிலடி, இணுவில்)
க. தர்மநாயகம்
(மஞ்சத்தடி, இணுவில்)
பொ. ஞானப்பிரகாசம்
(கரணவாய் தெற்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரிமையாளர்**
(கண்ணாடி களஞ்சியம், நெல்லியடி)
**இ. வீரசிங்கக்குருக்கள்**
(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)
**அதிபர்**
(கம்பர்மலை அ.த.க. பாடசாலை)
**அதிபர்**
(உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி)
**திருமதி சி. தருமலிங்கம்**
(இமையாணன், உடுப்பிட்டி)
**கனகலிங்கம் சந்திரவாசன்**
(நீர்வேலி)
**கி. அருள்நாதர்**
(பாலாவி தெரு, பொலிகண்டி)
**சறோஜினிதேவி மாணிக்கராசா**
(வறாத்துப்பளை, பருத்தித்துறை)
**கந்தையா காசிராசா**
(குப்பிளான் தெற்கு)
**மார்க்கண்டு முத்துப்பிள்ளை**
(அத்தியடி, யாழ்ப்பாணம்)
**க. விக்னேஸ்வரராஜா**
(புலோலி)
**லலிதா சண்முகலிங்கம்**
(திருமகள் வீதி, அரியாலை)
**சி. விவேகானந்தம்**
(பருத்தித்துறை)
**சி. நாகரூபன்**
(கரணவாய்)
**K. பிரதீபன்**
(யாழ்ப்பாணம்)
**ஐ. காளிங்கநடனம்**
(கொக்குவில்)
**கு. ரங்கநாதன்**
(இணுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க. ஜெயபாலகணேசன்**

(சிறுப்பிட்டி தெற்கு)

**Dr. அ. செந்தில்குமரன்**

(பல் வைத்திய நிபுணர், ஆதார வைத்தியசாலை, மந்திகை)

**இ. பாஸ்கரன்**

(நல்லூர், யாழ்ப்பாணம்)

**த. சிவானந்தமூர்த்தி**

(புத்தூர்)

**சி. பத்மகுமார்**

(இணுவில் தெற்கு)

**அதிபர்**

(இமையாணன் அ.த.க. பாடசாலை)

**பா. சுதாகரன்**

(கற்பகப் பிள்ளையார் ஸ்ரோர்ஸ், உடுப்பிட்டி)

**வ. கெங்கநாதன்**

(நீர்வேலி)

**P. நடராசா**

(கல்லடி ஒழுங்கை, சாவகச்சேரி)

**சி. சிவகுமார்**

(ஆவரங்கால்)

**S. முரளிதரன்**

(அச்சுவேலி)

**V. கருணாகரன்**

(சங்கானை)

**ச. சிவலிங்கம்**

(மானிப்பாய்)

**சண்முகம் தனலட்சுமி**

(கரணவாய்)

**வ. இரத்தினசிங்கம்**

(கம்பர்மலை)

**க. வைத்தியநாதன்**

(ஏழாலை)

**சி. கணபதிப்பிள்ளை**

(கரவெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே நிம்மதி!

**– திரு சி. நற்குணலிங்கம்** அவர்கள் –

இருப்பதில் சந்தோசமாக, அமைதியாக வாழ்வது நிம்மதியாகும். இருப்பதில் சந்தோசமாக இருந்தாலே நிம்மதி. இல்லாததை விட்டுவிட்டு இருப்பதில் சந்தோசமாக இருக்கப் பழகிக்கொண்டால் நிம்மதிதான். எனக்கான கடமைகளை நிறைவேற்றி இருக்கிறேன் என்ற உணர்வுடன் வாழ்வை நகர்த்துவதே நிம்மதி. நிம்மதி என்பது ஒரு விடுதலை நிலை. எந்த வொரு எதிர்பார்ப்பும் இல்லாமல் முயன்று நேர்மையாக உழைத்துச் சம்பாதித்து மகிழ்வாக வாழக் கற்றுக்கொண்டால் உங்கள் நிம்மதி உங்களுடன் இருக்கும். இருக்குமிடத்தில் இருந்த பொருட்களை வைத்துக்கொண்டு இன்பமாக இருந்தால் நிம்மதி தானாய்த் தெரியும். ஆனால் இல்லாததை எண்ணி அலைந்து திரிந்து நிம்மதி கெட்டு அதற்கு அடிமையாகி தொலைந்து போனவர்கள், போய்க்கொண்டு இருப்பவர்கள் அதிகம். அதுமட்டுமல்ல இவர்கள் எங்கே நிம்மதி எங்கே நிம்மதி? அங்கே எமக்கோர் இடம் வேண்டும் என்று வாழ்க்கையை தொலைக் கிறார்கள். சிலர் தொலைத்துவிட்டார்கள். நிம்மதி நோய் அல்ல. நிம்மதியைக் கொடுப்பவரைவிட கெடுப்பவரே அதிகம். நிம்மதியை நீயே தேடிப் பெற்றுக்கொள். தேவையென்றால் வரும் உறவையும் தேவையில்லாமல் வரும் உணர்வையும் ஒதுக்கிவைக்கக் கற்றுக்கொண்டால் நிம்மதி நிலைத்திடும். நாளை என்ன செய்யலாம் என யோசிக்கலாம். ஆனால் நாளை என்ன நடக்குமோ என யோசித்தால் அது நிம்மதியைக் கெடுத்துவிடும். நிம்மதி ஒன்றே வெகுமதி. இதை உலகமும் தேடிக்கொண்டுதான் இருக்கிறது.

வெற்றியோ, தோல்வியோ எதுவரினும் கடமையைச் செய்வோம். யார் பாராட்டினாலும் சரி, பாராட்டாமல் விட்டாலும் சரி கவலை வேண்டாம். நமது திறமையும், நேர்மையும் வெளியாகும்போது நிம்மதி பிறக்கும். நம் நிம்மதி கெடுவதற்கு பாதி காரணம் நம் கற்பனை யான வாழ்க்கையாகும். உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் இருப்பவர்கள் உறவை வைத்துக்கொண்டால் நிம்மதி கெடும். எனவேதான் வள்ளலார் "உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் இருப்பவர்கள் உறவை நாடவேண்டாம்" என்றார். எமது நடத்தையில் கவனம் வேண்டும். நடத்தைக்கும் நிம்மதிக்கும் தொடர்பு உண்டு. "நல்ல எண்ணத்தோடு இரு. அது உன் நடத்தையைப் பாதுகாக்கும்" என்றார் வள்ளலார். நாம் எண்ணும் எண்ணம் என்பது நூல் இல்லாத பட்டத்தைப்போன்றது. வானத்தில் அது பறந்துகொண்டிருக்கிறது என்பதைவிட மிதந்துகொண்டிருக்கிறது என்பதே சரி. வெறும் பட்டங்களாக அல்ல படங்களாக. நாம் எண்ணும் எண்ணங்கள் ஒரு நொடிக்கு ஐந்து இலட்சம் கிலோமீற்றர் வேகத்தில் எதை நினைக்கிறோமோ அங்கு சென்ற உடனே நம்மிடம் திரும்புவதாக மனோவியலாளர்கள் கண்டறிந்து இருக்கிறார்கள். தவறுகளை உணர்ந்தவர்கள் திருந்திவிடுவார்கள். தன்னுடைய தவறுகளை நியாயப்படுத்துபவர்கள் திருந்தவேமாட்டார்கள். இவர்கள் நிம்மதியை சந்திப்பது கடினம். நான் என்கிற ஆணவம், அவனா என்ற பொறாமை, எனக்கு என்கிற பேராசை இந்த

*வாழ்க்கையில் முன்னேறும்போதுதான் உழைப்பின் உன்னதம் புரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று குணங்களும் மனிதனை நிம்மதியாக வாழவிடாது. ஒவ்வொரு நிமிடமும் யாரோ ஒருவர் இந்த உலகத்தைவிட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். நமக்குத் தெரியாமல் நாமும் அந்த வரிசையில் நின்றுகொண்டிருக்கிறோம். எனவே வாழும் நாட்களில் நிம்மதியோடு வாழ வழி சமைக்க வேண்டும்.

அரண்மனை போன்ற வீட்டில், உயர் பதவியில், அறிவுடன் வாழ்வது நிம்மதி நிறைந்த வாழ்வைத் தராது. வாழ்வு என்பது அர்த்தமற்ற ஒன்றல்ல. மனிதன் சும்மா வாழ்ந்து மடிவதற்காகப் படைக்கப்பட்டவனல்ல. உண்டு, கும்மாழமடித்து, கூத்தாடி கடந்து செல்ல வேண்டியதல்ல வாழ்க்கை. வாழ்வு என்பது சுகம், துக்கம், மகிழ்ச்சி, கடமை, உரிமைகள், கொடுப்பினைகள் நிறைந்தவை. வாழ்வின் ஒவ்வொரு அசைவுக்கும் படைத்தவனுக்கு நாம் பதில் சொல்லியாக வேண்டும். இதைப் புரிந்து வாழ்ந்தால் வாழ்வுக்கு அர்த்தம் இருக்கும். அர்த்தத்துடன் வாழ்ந்தால் நிம்மதியுடன் வாழலாம். எப்பொழுதும் உண்மை, நேர்மை, ஒழுக்கம் என்பவற்றுக்கு முன்னுரிமை அளித்து வாழ வேண்டும். இவை மன அமைதிக்கு மிகச்சக்தி வாய்ந்த மருந்தாகும். மனதுக்கு வேதனை தரும் சிறிய விடயங்களை மறப்போம், மன்னிப்போம் முன் செல்வோம் என வாழ்ந்தால் நிம்மதிக்கு குறை ஏற்படாது. அதிகப்படியான கவலைகளை அளிக்கவல்ல அதிக சுமைகளை சுமப்பதால் நிம்மதி கெடும். நிம்மதி நாம் வாழும் இடத்தில் அல்ல. வாழும் விதத்தில்தான் இருக்கிறது. உலகத்துடனான தொடர்புகளைக் குறைத்து, வணக்கங்கள், தியானம், தன்னிலை ஆய்வு போன்றவற்றில் அதிக நேரத்தைச் செலவு செய்வதன்மூலம் நிம்மதியைக் காணலாம். நிம்மதி இருந்தால் நிமிடம்கூட வீணாகாது. சந்தோச மாக வாழ வேண்டும் என்பதைவிட நிம்மதியாக வாழவேண்டும் என்பதே மேல். நம் வார்த்தையால் ஒருவர் மனம் நிம்மதி அடைகின்றது என்றால் அதுவும் தர்மம்தான். நினைவுகள் நம்மைக் கொல்லும். எனவே நிம்மதிக்கு ஞாபகமறதி அவசியம் மரணம் வரை என்கிறார்கள். அதுவும் சரிதான்.

“ஆசையற்றவனே அகில உலகிலும் மிகப்பெரிய பணக்காரன்” என்கிறார் விவேகானந்தர். மிகச் சிறந்த பொக்கிஷம் சரியான நேரத்தில் கிடைக்கும் ஆறுதலும், மாறுதலும்தான். விரும்பியது கிடைக்கவில்லை என்றால், கிடைத்ததை விரும்பிக்கொள். வாழ்வின் வெளிச்சங் களைக் காணலாம். மகிழ்ச்சி வேண்டுமானால் பணம் சார்ந்ததாக இருக்கலாம். ஆனால் நிம்மதி என்றும் மனம் சார்ந்ததாகவே இருக்கும். நிம்மதியைத் தேடி செல்வத்துக்குப் பின்னால் ஓடி மிச்சம் மீதி இருக்கும் கொஞ்ச நிம்மதியையும் தொலைத்தவர்கள் ஏராளம். இருப்பதில் சந்தோசமாக இல்லாமல், இல்லாததை தேடி அலைய நினைப்பதால் நிம்மதி தொலைகிறது. நிம்மதியான வாழ்வு குறித்தே ஒவ்வொரு மனிதனும் கனவு காண்கிறான். அதனைச் செயல் வடிவில் கொண்டுவருவதற்காக ஓடுகிறார்கள். சிலர் அதைச் செயல் வடிவாக்கம் கொடுக்க முடியாமல் தவிக்கிறார்கள். அதிகாரத்தைக் கைப்பற்றி உலகையே அடக்கி ஆண்ட பலரும் தனிப்பட்ட வாழ்வில் நிம்மதியை தேடுபவர்களாகவே உள்ளனர். சரியான நேரத்தில் எதையும் நிறுத்தத் தெரிந்திருக்க வேண்டும். உடல் சம்பந்தப்பட்டவற்றை பழக்கத்தினால் நிறுத்தலாம். ஏனெனில் உங்கள் அறிவார்ந்த மனதுக்கு உடல் கட்டுப்படுகிறது. ஆகவே நிறுத்து என்றவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையற்றவைகளை நிறுத்த முடிகிறது. எதிர்மறை உணர்ச்சிகளை அதிகரிக்கவிடாது, உணர்ச்சிமயமான பிரச்சினைகளை சமாளிக்க எப்படி நிறுத்துவது, எப்பொழுது நிறுத்துவது என்பதைப் புரிந்து வாழ்ந்தால் நிம்மதி கிட்டும்.

எல்லோருக்கும் அவசியம் தேவை நிம்மதியான வாழ்க்கை. அதுமட்டுமல்ல அவசரமாகவும், அவசியமாகவும் தேவை நிம்மதியான வாழ்க்கை. ஆனால் இதை அனுபவிப்பவர்களோ சிலர். ஏனையோர் இதற்காக ஏங்குகிறார்கள். நிம்மதி இல்லாதோர் வாழ்க்கை கத்திமேல் நடப்பது போன்ற வாழ்க்கை. சிலர் நிம்மதியைத் தேடிக் குடிக்கிறார்கள். சிலர் வாழ்வில் நிம்மதி இல்லாததால் தற்கொலை செய்துகொள்கிறார்கள். அங்கலாய்த்து வாழக்கூடாது. வாழ்வில் நம்பிக்கை வைத்து வாழவேண்டும். எந்தவொரு அபாயகரமான முடிவுகளும் நிம்மதி தராது. கஸ்டம் வரும்போது பொறுமையாக இருக்க வேண்டும். நேர்மையாக உழையுங்கள். சேமியுங்கள். மனதைப் பராமரியுங்கள். இதயத்தை கழுவி சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். நிம்மதியான வாழ்க்கை அமைய யாரிடமும் எதையும் எதிர்பார்க்கக் கூடாது. இவ்வளவு கிடைத்ததேபோதும். கிடைத்ததைக் கொண்டு வாழ வேண்டும். குடும்பத்தைப் பேணிக் காத்துக்கொள். விட்டுக்கொடுத்து வாழ். உனக்கான வேலையை மட்டும் செய். தேவையில்லாமல் மற்றவர் வேலையில் மூக்கு நுளைக்காதே. நட்பு, சொந்தங்கள் என யாராக இருந்தாலும் எல்லாவற்றிலும் அளவோடு இரு. பண விடயத்தில் ஜாக்கிரதையாக இரு. அர்த்தமற்ற விடயங்களுக்காக பிறரை நீங்கள் பயன்படுத்தாதீர்கள். பிறர் உங்களைப் பயன்படுத்தவும் அனுமதிக்காதீர்கள். அமெரிக்காவின் பிரபல மனநல ஆலோசகரான செல்டன்கோப் எழுதிய நூலில் "உனக்கு நீதான் நீதிபதி" என்ற கருத்தை வலியுறுத்தி உள்ளார். அவ்வாறு ஒழுக வேண்டும். எண்ணங்களின் வெளிப்பாடே செயல்கள். நாளுக்கு அறுபது ஆயிரம் வரையிலான எண்ண வலைகளில் நாம் சிக்குண்டு இருக்கிறோம். எதிர்மறையான எண்ணங்கள் மனதில் எதிர்வினையைத் தோற்றுவித்து ஆபத்துக்களில் தள்ளிவிடும். சிந்தனைகளை நேர்முறையில் திசைமாற்றி அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆரோக்கிய வாழ்வை எட்டுவதன்மூலம் நிம்மதியைக் காணலாம்.

உனது வாழ்க்கைக்கு எல்லை இட்டு வாழ். ஆனால் எல்லைக்குள் வாழாதே. வட்டம்போட்டு வாழ்வதில் தவறில்லை. அந்த வட்டம்தான் வாழ்க்கை என்று நினைத்து வாழாதே. வசதியான வாழ்க்கைக்கு ஆசைப்படுவதைவிட நிம்மதியான வாழ்க்கைக்கு ஆசைப்படு. நிம்மதியற்ற கைதியாக வாழ முயற்சிக்காதே. வாழ்க்கையை விதி என்று வாழ்பவர்களே அதிகம். விதியை விலக்கி வாழுங்கள். விதி என்று எதையும் விட்டுவிடாதே. பிரச்சினைகளா? பிரச்சினைகளை தூரத்தில் வைத்துப் பழகுங்கள். நிம்மதி பக்கத்திலேயே இருக்கும். தூங்கும்போது நிம்மதியாகவும், எழுந்திருக்கும்போது சந்தோஷமாகவும் இருப்பவரே பணக்கார மனிதர். திருப்தி விலைமதிப்பற்றது. அவரவர் பாதை அவரவர் பயணம் திருப்திக்கான பாதையை வகுத்து வாழ்.

திருப்தி அடையாமல் ஆடம்பரத்தைத் தேடி அலையும் மனிதரிடம் கண்டிப்பாக மன நிம்மதி இருக்காது. உனக்கு நீதான் ஆறுதல் என்று உணராதவரை முட்டாள் நீதான். நாம்

*பொறுமையைக் கடைப்பிடிப்பவன் எல்லாவற்றையும் அடைவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை முழுமையாக ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாக இருக்கவேண்டும். எமக்குள் நாம் நாமாகவே இருக்கவேண்டும். இவ்வாறு இல்லாதவர்கள் பிறர் நலனை ஏற்கமுடியாதவர்களாகவும், எல்லாவற்றுக்கும் போட்டி போடுபவர்களாகவும், அழிவை ஏற்படுத்துபவர்களாகவும் இருப்பர். இவர்களிடம் நிம்மதி குடிகொள்ளுமா? பலர் விரும்பியும் கிடைக்காத வரம் நிம்மதியான உறக்கம். மனிதனுக்கு அறிவும், ஆன்மீகமும் தேவை. இதை தனித்தனியாக பிரிக்க முற்பட்டால் பிரச்சனைகள் தோன்றும். இவை பிரிக்கப்படாத வகையில் வாழ்வில் நிம்மதி கிட்டும். வாழ்வு என்பது அறிந்து அனுபவிக்க வேண்டிய சுகமான அனுபவம். அவ்வாறு வாழ முற்படுபவர் களுக்கு மரணம்கூட நிம்மதியான அனுபவமாக இருக்கும்.

## ஆற்றங்கரையில் வீற்றிருந்து அருள்புரியும் ஆறுமுகன்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம்பொருளான சிவபெருமானுடைய அம்சமான முருகப்பெருமான் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியிலே கருணைமழை பொழியும் கந்தப்பெருமானாக எழுந்தருளி அருள்பாலிக்கும் அழகே தனி.

உண்மையான பக்தியுடன் நம்பித் தொழுமடியார்களின் துன்பங்களைத் துடைத்தெறிந்து அருள்மழை பொழிந்து நல்வாழ்வு அருளுகின்ற ஆறுமுகனுடைய திருவருட்பொலிவு சொல்லில் அடங்காது. அடியவர்களின் வாழ்க்கையிலே வருகின்ற இடர்களையெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல விலகச் செய்து அவர்களுடைய வேண்டுதல்களை நிறைவேற்றி வைக்கின்ற வேற் பெருமான் இங்கே மூலாலயத்திலே அநந்தகோடி சூரியப் பிரகாசத்துடன் எழுந்தருளி இருக்கும் அருட்பாங்கு உண்மையான பக்தர்களுக்கு மட்டுமே புரியும்.

என்னுடைய வாழ்க்கையிலே நான்பட்ட துன்பங்களும் துயரங்களும் அளப்பரியன. அவற்றையெல்லாம் நொடிப்பொழுதில் விலகச்செய்து உள்ளத்திலே அமைதியையும் ஆனந்தத் தையும் நிம்மதியையும் இரவு நித்திரையையும் தந்தருளிய செவ்வேற்பெருமானின் கருணைத் திறனுக்கு எல்லையே இல்லை.

நல்லதை நினைத்து நடந்தால் முருகன் நிச்சயம் அருள்புரிவான். எனக்கு வீடில்லை என்று அழுது முறையிட்டு வணங்கினேன். இப்போது நான் வசிக்க ஒரு வீடு தந்து மனதில் நிம்மதியையும் தந்துவிட்ட அருட்கருணைத் திறத்தை என்னென்பது?

கருணை மழை பொழியும் கந்தனாக, அருள்மழை தந்திடும் அறுமுகனாக, வினை தீர்க்கும் வேலனாக இந்த தொண்டைமானாற்றிலே வீற்றிருக்கும் வேலவனின் அருட்பாங்கு உண்மையாக அனுபவித்த அடியவர்களுக்குத்தான் புரியும்.

கலியுகத்திலே கண்கண்ட தெய்வமாக விளங்கும் கந்தன் தமது அருட்சக்திகளான வள்ளியுடனும் தெய்வானையுடனும் வீற்றிருந்து நம்பி வரும் நல்லடியார் நலம்பெற அருள்புரிந்து அரசோச்சி வரும் அழகு எல்லோருக்கும் விளங்காது.

மெய்யன்பர்களே! நீங்கள் துன்பப்படுகிறீர்களா? வாழ்வில் வேதனை கூடிவிட்டதா? சோதனையால் துவண்டு போனீர்களா? கவலையை விடுங்கள். கந்தனிடம் வாருங்கள். உங்கள் குறையைச் சொல்லி முறையிடுங்கள். அடுத்த நிமிடமே ஆற்றங்கரையான் கருணை காட்டுவான். உங்கள் வாழ்க்கையிலே வசந்தம் வீசும்; சுகந்தம் மலரும்; இன்பம் பெருகும். ஒருமுறை வந்து பாருங்கள். உண்மை விளங்கும். கலியுகவரதன் பொழியும் கருணை மழையில் நீங்கள் நனைவீர்கள். துன்பம் விலகும். துயரம் நீங்கும். மகிழ்ச்சி பொங்கும். வருவீர்களா?

"வேலுண்டு பயமில்லை. மயிலுண்டு வினையில்லை"

-இராசையா ஸ்ரீதரன்-

*உன்னையன்றி உனக்கு தலைவன் வேறு யாரும் இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனுடன் நேரில் தொடர்புகொண்ட இறையருட் செல்வர்கள் வரிசையில் ஆதிசங்கரர்

**– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –**

மலையாள தேசமான கேரளா மாநிலத்தில் காலடி என்னும் புனிதமான திருவூர் சைவசமய எழுச்சியின் மையமானது. இத்திருவூரில் 2100 வருடங்களுக்கு முன் வாழ்ந்த சிவகுரு ஆர்யாம்பாள் தம்பதியினர் அரிய தவசீலர்களாகவே வாழ்ந்தனர். இவர்கள் தமது இல்லறம் சிறக்க நல்லறம் காத்து இறையருளை நாடி அயலிலுள்ள திருப்பேரூரில் (திருச்சூர்) அருள் பாலிக்கும் பரமனிடம் தமக்கொரு மழலைச் செல்வம் வேண்டிப் பிரார்த்தித்தனர்.

தமது பக்தர்களின் கனவிற் தோன்றிய இறைவன் பதினாறு வயதினை ஆயுளாகக் கொண்டு எனது அம்சமான மகன் பிறப்பான் எனத் தெரிவித்தார். இறையருட் சித்தப்படி குறிப்பிட்ட கால எல்லையில் சிவாம்சம் பொருந்திய அழகிய ஆண்மகவை ஆர்யாம்பாள் பெற்றெடுத்தாள். தமது சற்புத்திரரை மிக அன்புடன் பேணி அரவணைத்து வளர்த்தனர். இப் பிள்ளை என்றும் ஆனந்தத்தைத் தருபவன் என்னும் தூய சிந்தனையால் "சங்கரன்" எனப் பெயரிட்டனர்.

சங்கரனின் பிறப்பு முதல் அங்க அசைவுகள் மதிநுட்பம் யாவும் இறையருளின் சிறப்பாகவே அமைந்ததால் பெற்றோர் சங்கரனை நன்கு கண்ணும் கருத்துமாகப் பேணி வளர்த்தனர். மூன்றாம் வயதில் சங்கரன் ஏட்டுக் கல்வியில் இணைக்கப்பட்டான். கல்வியின் விவேகம் பல நூல்களையும் நாட வைத்தது. நான்காம் வயதில் சங்கரன் வீதியோரம் நின்று விளையாடிக்கொண்டிருந்தான். அச்சமயம் வீதியால் வலம்வந்த தேரினில் வரும் சுவாமியைச் சங்கரனுக்குக் காண்பிப்பதன் பேரில் தந்தை சங்கரனைத் தமது தோள்மீதிருத்திக் காண்பித்தார். அச்சமயம் இறையருட் சித்தியால் மயங்கிய தந்தையார் தேரில் பவனி வந்த சுவாமியின் இடத்தில் சங்கரன் வீற்றிருந்ததைக் கண்டார். கண்டதும் வியந்த தந்தை தமது தோள்மீது சதாசிவன் (இறைவன்) காட்சி தந்ததையும் கண்டு வியந்தார். (இறைவன் தமது கனவில் இறைவனின் அம்சமாகவே மகன் பிறப்பான் என்பதையும் உணர்ந்தார்.) ஒரு நொடிப்பொழுதில் இவ்விரு தோற்றங்களும் இயல்புநிலையை அடைந்தன. இவ்வரிய சிவ தரிசனத்தை இறைவனின் திருவிளையாடலாகவே உணர்ந்த சிவபக்தனான சிவகுரு சில மாதங்களில் சிவபதமடைந்தார்.

தந்தையின் ஈமக்கிரியைகளுக்காக நான்கு வயதான சங்கரன் அழைத்துச் செல்லப் பட்டான். தந்தையின் சிதைக்குத் தனயன் தீயிடவில்லை. பதிலாக ஒரு தர்ப்பையைக் கிள்ளிப் போட்டதும் தீ மூண்டது. தீ சுவாலித்து எரியவும் யாவரும் வியந்தனர். தாயார் விதவைக் கோலத்துடன் சங்கரனை நன்கு பேணி வளர்த்தாள். ஐந்தாம் வயதில் குல ஆசாரப்படி சங்கரனுக்குப் பிரம்ம உபதேசம் நடைபெற்றது. பின்னர் பிரம்மச்சரிய ஒழுக்கத்தைக்

*நீங்கள் நிறுத்தாதவரை எவ்வளவு மெதுவாகச் சென்றாலும் பரவாயில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடித்து வேதநெறி கற்பதற்காகக் குருகுலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டான். நீடிய காலம் கற்கவேண்டிய உயர் வேதநெறியைச் சங்கரன் இரு வருடங்களிற் கற்றறிந்தான்.

குருகுல நியதிப்படி குருகுல ஆசாரத்தைக் கடைப்பிடித்த சங்கரன் ஒருநாள் பிச்சை எடுப்பதன் பேரில் புறப்பட்டு ஒரு ஏழை மூதாட்டியின் வீட்டு வாசலில் நின்று தமது பிஞ்சுக் குரலில் பிச்சை இடுமாறு வேண்டினான். சங்கரனின் பிஞ்சுக் குரலைக் கேட்டதும் வெளியே வந்தவள் வறுமை காரணமாக அவளின் கணவன் வேறூருக்குப் பிச்சை எடுக்கச் சென்றாலும் சிறிய பருவத்தில் பிச்சை கேட்டு வந்த சிறுவனுக்கு ஏதேனும் கொடுக்க வேண்டுமென்றதால் உள்ளே சென்றாள். ஒரு சட்டியில் தப்பித் தவறியிருந்த நெல்லிக்காய் வற்றலை எடுத்து வந்து சங்கரனின் பிச்சா பாத்திரத்தில் அன்புடன் இட்டாள்.

சங்கரன் அந்த மூதாட்டியின் வறுமையின் பதட்டத்தையும் அன்பையும் நோக்கினான். மகாலட்சுமியை வேண்டி இவளுக்கு அருள்புரியுமாறு தமது பிரம்மச்சரியத்தின் முதற் பாடலாக கனகதாரா தோத்திரப் பாடல்களைப் பாடினார். மகாலட்சுமியின் பேரருளால் இவளின் இல்லம் நிறைய தங்க நெல்லிக்கனிகள் நிறைந்தன. மூதாட்டியும் மகிழ்ந்தாள். சங்கரன் தமது வாழ்வில் தமக்கென கேளாது ஏழை மீதிரங்கிப் பாடிய முதற்பாடல் சங்கரன் வாழ்வில் சித்தியைத் தந்தது. சங்கரன் தமது எட்டு வயது வரை (இரு வருட காலம்) தமது கற்கவேண்டிய குருகுலக் கல்வி சந்நியாசத்திற்கான பயிற்சிகள் யாவற்றையும் இலகுவில் கற்றுத் தேறியதும் வீடு திரும்பினான்.

சங்கரனின் தாயார் தினமும் தமது வீட்டிலிருந்து நீராடுவதற்காகத் தமது வீட்டிலிருந்து சற்றுத் தொலைவிலுள்ள ஆற்றங்கரைக்குச் சென்று வந்தவள். தற்போது உடல்நலக்குறைவால் தாய்க்கு ஏற்பட்ட துன்பத்தைச் சங்கரன் உணர்ந்தார். இதனால் சங்கரன் அந்த நதி தேவதையைப் பிரார்த்தித்தான். சக்தியின் ஆணையின் பேரில் நதியானது சங்கரனின் வீட்டினருகே தமது பாதையை மாற்றிப் பாய்ந்தது. இதனால் தாயார் எதுவித சிரமமுமின்றி நீராடி மகிழ்ந்தாள்.

சங்கரன் சிறு வயதிலேயே துறவறம் பூணச் சித்தங்கொண்டு தாயாரிடம் அனுமதி கோரினான். தாயார் தமது தனிமையை நோக்கி மறுத்தாள். இறையருட் தூண்டலால் ஒரு நாள் தாயார் நீராட ஆற்றங்கரைக்குச் சென்றபோது சங்கரன் தானும் நீராடச் சென்றான். சங்கரன் நீராடியபோது முதலையொன்று சங்கரனின் காலைக் கௌவியது. அச்சமயம் சங்கரன் தன்னை முதலை பிடித்ததைத் தாயாரிடம் தெரிவித்துத் துறவறஞ் செல்ல அனுமதித்தால் அதற்குரிய மந்திரத்தால் முதலையின் பிடியிலிருந்து விடுபட்டு உயிருடன் வாழலாம் என்றான். அதைக் கேட்டதும் தாயார் தமது மகனின் உயிர் தப்புவதன் பேரில் துறவறத்திற்குச் சம்மதித்தாள். உடனே சங்கரன் அதற்குரிய மந்திரத்தை ஓதியதும் முதலைவிட்டு விலகியது. பிரம்மாவின் சாபத்தினால் முதலையான கந்தர்வன் தமது சுய உருவத்தில் வந்து தமது சாப விமோசனத்தைக்கூறி சங்கரனை வணங்கிச் சென்றான். சங்கரன் வீடு திரும்பாது தாயாரை வணங்கி அம்மா நான் துறவறம் மேற்கொண்டாலும் உனது இறுதிக்காலத்தில் உன்னை வந்தடைந்து கடமைகளை நிறைவேற்றுவேன் என வாக்களித்துச் சென்றான். சங்கரன் தமது திறமையால் யோக குருவாக இருந்தாலும் மண்ணுலக நியதிப்படி காவியுடுத்து உபதேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறவெனச் சற்குரு ஒருவரைத் தேடினார். நர்மதை ஆற்றோரம் தவமுனிவரான குரு கோவிந்தபாதர் என்பவரைத் தரிசிக்க நேர்ந்ததால் அவரைக் கண்டதும் பாதங்களில் வணங்கித் தன்னைச் சீடனாக ஏற்குமாறு பணிந்தார். சங்கரனின் பக்குவநிலையை அறிந்த ஞானகுரு அவரைச் சீடராக ஏற்றுக்கொண்டார். குரு சீடனுக்கு அத்வைத நெறிகளை அன்போடு உப தேசித்தார். ஞானகுருவின் பூரண ஆசியுடன் சங்கரன் அத்வைத நெறிகளைச் சிறப்பாகக் குறுகிய காலத்துட் கற்றுத் தேறினார். இதனால் திருப்தியடைந்த ஞானகுரு சங்கரரைத் தம்மிடமிருந்து பிரிந்து செல்ல அனுமதியளித்து ஆசீர்வதித்தார். ஆசிபெற்ற சங்கரரைக் காசிக்குச் சென்று கங்கைக் கரையில் ஆச்சிரமம் அமைத்துச் சீடர்களுக்கு அத்வைத தத்து வத்தைப் போதிக்குமாறு குரு வழியனுப்பினார்.

ஞானகுருவின் ஆணைப்படி சங்கரர் காசிக்குச் சென்று புனிதமான கங்கைக் கரையோரத் தில் ஆச்சிரமம் அமைத்துத் தங்கினார். வயதால் குறைந்தாலும் ஞான அறிவால் புடம்போட்ட தங்கமான வளமான ஞான முதிர்வான இளம் துறவியை நாடிப் பல சீடர்கள் வந்து சேர்ந் தனர். சங்கரர் தமது நாளாந்தப் பணியாக அதிகாலையில் புனித கங்கையில் நீராடியதும் விசுவநாதப் பெருமானை உள்ளன்போடு வழிபட்டதும் தமது சீடர்களுக்குப் போதிக்கும் செயலை நிலைநாட்டினார். சங்கரரின் உத்தமமான சீடன் சந்தனன் குருவின் பணிக்காகக் கங்கையின் மறுபுறத்தில் நின்றார். குரு மாணவர்களுக்குப் போதிக்கும் வேளை வந்ததும் குரு சீடனை நோக்கிக் கையின் சைகையால் உடன் வருமாறு அழைத்தார். அச்சமயம் சந்தனன் குருபக்தியைத் துணையாகக் கொண்டு கங்கையைக் குறுக்காகக் கடந்து வந்தான். சீடனின் குருபக்தியைக் கண்டு மெச்சிய கங்காதேவி சீடனின் ஒவ்வொரு பாதங்களும் கங்கையில் வைக்குமிடத்தில் ஒவ்வொரு தாமரை மலரை அமையச் செய்தாள். சீடன் ஒவ் வொரு தாமரை மலரிலும் தமது பாதத்தை வைத்துக் குருவிடம் வந்தடைந்தார். மாணவனின் குருபக்தியும் அவரது மனவலிமையும் கங்காதேவியின் தாமரை மலர் தந்த அரவணைப்பும் சீடனைக் குருவிடம் உரிய நேரத்திற் சேர்த்தது. அன்று முதல் சனந்தனன் "பத்மபாதர்" என அழைக்கப்படலானார். காசியிலிருந்த காலத்தில் சங்கரர் தமது திறமையால் உபநிஷத்துக்கள் பிரம்ம சூத்திரம் ஆகியவற்றின் விளக்க உரையைச் சிறப்பாக எழுதினார்.

### சண்டாளனாக வந்த காசி விசுவநாதர்

ஒரு நாள் சங்கரர் தமது சீடர்களுடன் கங்கையில் நீராடியதும் விசுவநாதப் பெருமானை வணங்கிவிட்டு வந்திருந்தார். அச்சமயம் இறைவன் நான்கு வேதங்களையும் நாய்களாக அழைத்துக்கொண்டு மாசடைந்த கோலத்தில் ஒரு சண்டாளனின் வடிவில் நேரில் வந்தார். சங்கரன் அச்சண்டாளனைச் சற்று விலகித் தமக்கு வழிவிடுமாறு கூறினார். அச்சண்டாளன் சிரித்துக்கொண்டு ஆத்மாவையா அல்லது உடலையா விலகச் சொல்கிறீர்கள். ஆத்மா பரி சுத்தமானது. மண்ணிற் தோன்றிய எல்லா ஆத்மாக்களும் ஒன்றுதான். கங்கை நீர் நிறைந்த குடத்திற் தோன்றும் சந்திரனின் விம்பமும் மதுவால் நிறைந்த குடத்தில் தோன்றும் சந்திரனின் விம்பமும் ஒன்றுதான். இதிற் பேதமில்லை. உடலானது உயிரால் இயக்கப்படுவது. உயிர்

*வருந்தாதே எதை இழந்தாலும். அது இன்னொரு வடிவில் வந்து சேரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்தால் உடல் சடலமாகும் என்ற மெய்ப்பொருளைச் சண்டாளன் எடுத்துரைத்தான். உண்மையை உணர்ந்த சங்கரர் சண்டாளனின் பாதங்களில் விழுந்து வணங்கினார். சண்டாளன் மறையவும் காசி விசுவநாதர் சங்கரருக்குக் காட்சி தந்து ஆசீர்வதித்தார்.

## வேதவியாசரும் சங்கரரும்

ஒரு சமயம் ஒரு முதிய வேதியர் சங்கரரிடம் வந்து சங்கரர் எழுதிய பிரம்ம சூத்திரம் என்னும் நூல் விளக்கவுரையையிட்டு விவாதிக்க வந்தார். விவாதம் உச்ச நிலையில் நடைபெற்றபோது சங்கரரின் சீடரான பத்மபாதர் பிரம்மசூத்திரத்தை எழுதிய வேதவியாசரே மாற்றுருவில் வாதிட வந்ததாகத் தமது ஞான உணர்வால் அறிந்தார். அச்சமயம் பத்மபாதர் இருவர் கால்களிலும் விழுந்து பணிந்து சிவபெருமானே சங்கரராகவும் நாராயணரே வேத வியாசராகவும் அவதரித்து வந்து இப்படி வாதிட்டால் ஏழைப் பணியாளராகிய நான் என்ன செய்யமுடியும் எனத் தாழ்மையுடன் பகர்ந்தார். அச்சமயம் சங்கரர் விவாதத்தை முடித்துக் கொண்டு வேதவியாசரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். வேதவியாசர் சங்கரரை நோக்கி உமக்கு 16 வயதே நியமமாகும். மேலும் 16 வருடம் வாழ்ந்து எல்லா வேதங்களையும் மக்களுக்கு உபதேசித்து வருவாயாக என ஆசீர்வதித்தார்.

## சீடரான சுரேஸ்வராச்சாரியார்

சங்கரர் அத்வைத தத்துவத்தைப் போதித்துச் செல்லும் மார்க்கத்தில் பிரயாகை என்னும் ஊரில் குமரிலபட்டர் என்பவருடன் உரையாடினார். சங்கரர் ஞான மார்க்கமே சிறந்ததென்பதை வாதிட இருப்பதாகவும் தெரிவித்தார். அச்சமயம் மகிஷ்மதி என்னும் ஊரிலுள்ள மண்டனமிஸ்ரர் என்பவர் வாதிடக்கூடியவரெனக் குமரிலபட்டர் தெரிவித்தார். இதன் பேறாக சங்கரர் மண்டனமிஸ்ரரை நாடிச் சென்றார். அச்சமயம் அவரின் வீடு பூட்டப் பட்டிருந்தது. சங்கரர் தமது ஞான சக்தியால் பூட்டப்பட்டிருந்த வீட்டினுட் பிரவேசித்தார். இருவரும் வாதிட முன்வந்தனர். மண்டனமிஸ்ரரின் மனைவி இவ்வாதிடும்போது நடுவராக இருப்பதாகவும் தெரிவித்தார். அவரின் வேண்டுதலால் இருவரும் கழுத்தில் பூமாலை அணிந்து கொள்ளவும் வாதில் யார் தோற்கிறார்களோ அவர் வாதில் வெல்பவரின் சீடராகச் செல்லவும் யாவரும் ஒப்புக்கொண்டனர். நீடிய கால விவாதத்தில் சங்கரர் வென்றார். மண்டனமிஸ்ரர் சீடரானார். சீடராக ஏற்றவருக்குச் சங்கரர் சுரேஸ்வராச்சாரியார் எனப் பெயரிட்டு அழைத்துச் சென்றார்.

## நரசிம்மரின் பேரருள்

சங்கரர் தமது சமய விருத்திப் பணிகளுக்காகத் தமது சீடர்களையும் அழைத்துக் கொண்டு ஆந்திராவிலுள்ள ஸ்ரீசைலம் குன்றுகளை அடைந்தார். இவ்விடத்தில் தியானத்தில் இருந்தார். அப்பகுதியிலுள்ள மதவெறியர்கள் தமது விசேட சிறப்பான தேவைக்காகத் தெய்வத்திற்கு நரபலியிடுவதற்காக அழைத்தனர். தெய்வ நரபலிக்காக ஒரு நாட்டின் அரசன்

*உன் பலத்தோடு மோதுபவன் எதிரி. உன் பலவீனத்தோடு மோதுபவன் துரோகி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது சந்நியாசியாரின் தலைதான் பலியாக இருப்பதாகவும் தெரிவித்தனர். அச்சமயம் சங்கரர் அவர்களின் விருப்பப்படி நள்ளிரவு குறிப்பிட்ட வைரவர் சந்நிதிக்கு வருவதாகத் தெரிவித்தார். சங்கரரின் பிரதம சீடரான பத்மபாதர் நரசிம்ம மூர்த்தியைப் போற்றி வழிபட்டுத் தமது குருவைக் காப்பாற்றுமாறு வேண்டினார். அச்சமயம் நரசிம்மர் தோன்றி மதவெறியர்களைக் கொன்றொழித்தார். சங்கரர் நரசிம்மர்மீது தமது பக்தி மேலீட்டினால் பாடல்கள் புனைந்து பாடினார்.

## மனவளமற்ற ஊமைச் சிறுவன் சீடரானான்

கன்னடத்தில் ஏழு வயதுவரை மனவளர்ச்சியின்றும் ஊமையாகவும் வாழ்ந்த அந்தணச் சிறுவன் இருந்தான். இதனால் பெற்றோர் கவலையில் மூழ்கியிருந்தவேளை சங்கரரின் பெருமை யையும் அறிந்தனர். தந்தை தமது மகனையும் அழைத்துக்கொண்டு சங்கரரிடம் சென்று தமது மகனின் நிலையைத் தெரிவித்தார். சங்கரர் அச்சிறுவனை வாய் பேசச் செய்து தமது சீடராக ஏற்றுக்கொண்டார். அச்சீடருக்கு உள்ளங்கை நெல்லிக்கனி என்னும் பொருளில் "ஹஸ்தமாலாகா" என நாமஞ்சூட்டித் தம்முடன் அழைத்துச் சென்றார்.

பின்னர் கர்நாடகா மாநிலத்து துங்கபத்திரை நதியோரத்திலுள்ள சிருங்கேரிக்குச் சென்றார். அவ்விடத்தில் சாரதாதேவிக்கொரு ஆலயத்தைக் கட்டியெழுப்பினார். இவ்விடத்தில் ஒரு கல்வி நிலையத்தையும் ஒரு மடத்தினையும் நிறுவினார். இங்குள்ள மடத்தில் மந்த புத்தியும் குருபக்தியும் நிறைந்த கிரி என்னும் சீடன் இணைந்தான். ஒருநாள் இச்சீடன் குரு வின் ஆடைகளை அலம்பிக் கொண்டிருந்தவேளை குரு பாடங்களைக் கற்பிக்கத் தொடங்கி விட்டார். சீடன் குருவின் பணிவிடை செய்யும்போதே பாடங்களையும் குரு பக்தியின் மகிமையால் கிரகித்தான். சீடன் தனது பணிமுடிந்து வகுப்புக்குள் வரும்போது குரு கற்பித்த பாடத்தை "தோடகா" என்ற சீரில் எட்டுப் பாடல்களையும் பாடிக்கொண்டு வந்தான். குரு சீடனின் திறமையை உணர்ந்து "தோடகாச்சாரியார்" எனப் பெயர் சூட்டினார்.

சங்கரர் சிருங்கேரி மடத்தில் இருக்கும்போது தாயாரின் இறுதிக்காலம் வந்ததை உணர்ந்தார். பரத்பாதர் என்ற சீடருடன் தாயாரிடம் வந்தார். வந்ததும் தாயாரை வணங்கி ஆறுதல் கூறி அவரின் தலையைத் தமது மடிமீது வைத்தார். தாயாரின் தலையை வருடியவாறு மகாவிஷ்ணுவை வேண்டிப் பாடிச் சமயத்தத்துவங்களை எடுத்துரைத்தார். இதனால் தாயாருக்கு மகனின் அரவணைப்பும் இறைவன் தரிசனையும் கிடைத்ததும் தயார் இறைவனடி சேர்ந்தார்.

## தாயாரின் இறுதிக்கடமை

சங்கரர் தாம் முன் வாக்களித்ததன் பேரில் தாயாரின் ஈமக்கிரியைகளைச் செய்ய முற்பட்டார். ஆனால் சந்நியாசிகள் தீ சம்பந்தமான காரியங்களைச் செய்யக்கூடாதென்ற நியதியில் ஊர் மக்கள் நெருப்புக் கொடுக்க மறுத்தனர். சங்கரர் தாயாரின் வீட்டு முன்றலில் காய்ந்த விறகுக் கட்டைகளை அடுக்கி அதன்மீது தாயாரின் உடலை வைத்தார். தமது வலக்கையிலிருந்து தீயை உண்டாக்கித் தாயாரின் இறுதிக்கடனையும் நிறைவு செய்தார்.

*நீ ஏழையாகப் பிறப்பது உன் தவறில்லை. நீ ஏழையாக இறப்பதுதான் உன் தவறு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கரரின் மனநிறைவான பணி**

சங்கரர் தமது தாயாருக்கு வாக்குறுதியளித்ததன்பேரில் நாடு முழுவதிலும் உள்ள தூர இடங்களை நாடாது குறுகிய வட்டத்திலேயே தமது பணியை ஆற்றினார். தாயாரின் கடமைகள் யாவும் நிறைவடைந்தன. தமது பணிக்காக தேசம் முழுவதும் சென்று பணியாற்ற முன்வந்தார். முதற் பணியாகத் திருக்கயிலை சென்று பரமேஸ்வரரை உளமாரத் தரிசித்து வழிபட்டார். சங்கரரின் தூய வழிபாட்டில் இறைவன் ஐந்து சங்கரமூர்த்திகளான யோக, மோஷ, முத்தி, வர, போக இலிங்கங்களை அவரின் கைகளில் வைத்தருளினார். இந்த இலிங்கங்களைத் தரிசிக்கும் எவரும் இலகுவில் ஞானம் பெறுவர் என இறைவன் செப்பினார். இறைவனால் வழங்கப்பெற்ற யோக லிங்கத்தை தமது ஆத்ம பூசைக்கென வைத்துக்கொண்டார். ஏனையவற்றைச் சிதம்பரத்திலும், பத்திரிகாச்சிரமத்திலும், நேபாளத்திலுள்ள நீலகண்ட திருத் தலத்திலும், சிருங்கேரியிலும் நிறுவினார். இவர் கைலாயஞ் சென்றபோது சௌந்தரலகரி என்ற மகாமந்திர தோத்திரத்தை அங்கிருந்து எடுத்துவந்து இவ்வுலகிற்கு அர்ப்பணித்தார்.

சங்கரர் தமது கைலை யாத்திரை நிறைவில் காஞ்சி திருத்தலத்தை அடைந்தார். அங்கு காமாட்சி அம்மன் ஆலயத்தில் ஸ்ரீகாமகோடி சக்கரத்தைப் பிரதிஷ்டை செய்தார். சங்கரர் தாம் உபதேசித்த அத்வைத தத்துவத்தை நிலையாக அமைவதற்காக நான்கு திசைகளிலும் நான்கு மடங்களை நிறுவினார். தமது சிறந்த நான்கு சீடர்களை இம்மடங்களில் பொறுப்பாக இருந்து பணியாற்றுமாறு நியமித்தார். தெற்கே சிருங்கேரியில் சாரதா பீடத்தின் பொறுப்பாக சுரேஸ்வராச்சாரியார் மேற்கே துவாரகையில் காளிங்க பீடத்தின் பொறுப்பாக ஹஸ்த மாலாகா, வடக்கே பத்திரியில் ஜயோதிர் பீடத்தின் பொறுப்பாக பத்மபாதர் ஆகியோரை நியமித்தார். காஞ்சியில் காமகோடி பீடத்தில் தாமே முதலாவது குருவாகவும் ஏற்றார்.

இந்திய மண்ணில் இயங்கிய இந்து மதத்தினர் சிவபெருமானையே முழுமுதற் கடவுளாக ஏற்று வழிபட்டனர். மேலும் சிவனின் சக்தி, விநாயகர், முருகன், மகாவிஷ்ணு, சூரியன் ஆகிய தெய்வ வழிபாட்டில் சிலர் கூடிய கவனஞ் செலுத்தியதால் ஒரே மதமான இந்துமதத்தில் ஆறு உப பிரிவுகளையும் சங்கரர் வகுத்து யாவரையும் வேண்டியவாறு இலகுவில் வழிபட உதவினார். இதன் பேறாகச் சிவபெருமானை வழிபடும் சமயம் சைவம் என்றும் சக்தியை வழிபடும் சமயம் சாக்தம் என்றும் விநாயகரை வழிபடும் சமயம் காணபத்தியம் என்றும் மகாவிஷ்ணுவை வழிபடும் சமயம் வைஷ்ணவம் என்றும் முருகனை வழிபடும் சமயம் கௌமாரம் என்றும் சூரியனை வழிபடும் சமயம் சௌரம் என்றும் இன்றுவரை நிலைத்துள்ளது. இவ்வாறு அத்வைத தத்துவங்களை இந்திய மண்ணில் நிலைநிறுத்தினார்.

சங்கரர் அவதரித்தபோது 16 வருடங்களை மட்டும் ஆயுளாக இறைவன் வழங்கினார். இவரின் விரிவான பணிகளை நோக்கிய வேதவியாசர் இவரை நேரிற்கண்டு விவாதித்தார். அதன் பேறாக 32ஆம் வயதுவரை பணியாற்றுமாறு வழிமொழிந்தார். குறிப்பிட்டபடி 32ஆம் வயதில் இறைவனின் திருமேனியில் ஸ்ரீசங்கரபகவத்பாதர் ஐக்கியமானார். முதன் முதல் காஞ்சிகாமகோடி பீடத்தை நிறுவிய ஆதிசங்கரர் தாமே குருமுதல்வராகப் பணியேற்று வாழ்ந்து காட்டினார். இதனால் இந்த மடம் காஞ்சிகாமகோடி சங்கராச்சாரியார் மடம் என்னும் பெயருடன்

*தனக்கு நிகழும் வரை எல்லாமே வேடிக்கைதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுவரை பல அருட்பணிகளைத் தொடர வைத்தார். இவரின் பின் 68ஆவது பீடாதிபதியாக நியமனம் பெற்றவர் சந்திரசேகேந்திர பரமாச்சாரிய சரஸ்வதி சுவாமிகள். இவர் இறையருட் சித்தப்படி 13 வயதில் நியமனம் பெற்று 87 வருடகாலம் அருட்பணியாற்றித் தமது நூற்றாண்டு விழாவான கனகவிழாவையும் கண்டபின் 100 வயது நிறைவில் முத்தியடைந்தார். இவரின் சிறப்பால் காஞ்சிப்பெரியார் என யாவராலும் போற்றப்பட்டவர். தமது வாரிசாக 69,70ஆம் குருவான சீடர்களையும் தாமே நியமித்தார். இன்று இவரின் இரண்டாம் சீடரே எழுபதாம் பிரதம குருவாகப் பணியாற்றுகிறார். பாரெங்கும் காண முடியாத குருபரம்பரையை மலரச் செய்த ஆதிசங்கரரின் தூய வழிகாட்டல் 2100 வருடங்களாக நிலைத்துள்ளமை எமது சைவ சமயத்தின் அருட்சக்தியேயாகும்.

## தென்றலும் புகழ் பாடும்!

பல்லவி

தொண்டைமான் ஆற்றினிலே நீராடி, நினைத்
தொழ வந்தேன்! திருப் புகழ் பாடி! (தொண்டை)

அநுபல்லவி

தண்டமிழ்க் கடவுளே! உந்தன் வரம் வேண்டி
தாள் பணிந்தேன்! உன்னை நிதம் நாடி! (தொண்டை)

சரணம்

எத்தனையோ அற்புதங்கள் செய்திடுவாய்!
ஏற்றமுற வழிகள் காட்டி நிற்பாய்!
வித்தகக் கடவுளாய் விளங்கிடுவாய்!
வேலோடு வந்தே, வினைகளை வேரறுப்பாய்!
(தொண்டை)

பூவரச மரமும் உந்தன் புகழ் பாடும்
பொழுதெல்லாம் பக்தர் கூட்டம் அங்கு கூடும்!
தேவார, பாராயணம், தினம் ஒலிக்கும்!
தென்றலும் வந்து உந்தன் மகிமையினைப் பாடும்! (தொண்டை)

-கி. குலசேகரன்-

அகங்காரம் இருப்பவனால் சேவை செய்யமுடியாது! சேவை செய்பவனுக்கு அகங்காரம் போய்விடுகிறது. அகங்காரத்தை அழிப்பதும் சேவையின் முக்கியமான பலனே! அதனால் அதை எதிர்நோக்கி உன் சேவையைத் தொடங்கு! சேவையை விடச் சிறந்தது வேறொன்றும் கிடையாது.

*பணத்தின் உண்மையான மதிப்பு பிறரிடம் கடன் கேட்கும்போதுதான் புரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவமான நாடு அவம்போகா வண்ணம் அனைத்தையும் ஏழைகளிடம் பேறாக்குவீர்களாயின் புண்ணியம் கிடைக்கும்!

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த குடும்பங்கள் யாவருமே எதையுமே அவம்போகாதபடி பயன்படுத்துவதில் பலே கெட்டித்தனமாக வாழ்ந்து புண்ணியத்தைத் தேடிக்கொண்டனர்.

அவர்களின் புண்ணியத்தாலேயே தற்போதைய சந்ததி வாழ்ந்துகொண்டிருக்கின்றது. அவர்களது சேமிப்பையே எம்மால் அனுபவிக்க முடிகிறது. நாம் ஏதோ கெட்டித்தனம் பேசுமளவிற்கு எதையுமே சேமிக்க முடியாமல் இருக்கிறது. சேமிக்கவும் தெரியாது.

சிக்கனமாகவும் எளிமையாகவும் இலகுவாகவும் உடல் உழைப்போடும், பேராசைப் படாமலும், உள்ளதே போதும் என்ற ஆத்ம திருப்தியோடும் வாழ்கின்ற ஒரு சமூகம் வடபுலத்தில் இல்லாமல் போய்விட்டதே என்ற கவலை பூமாதேவிக்கு வந்துவிட்டது.

சொகுசாக இருப்பவர்களும், சோக்குப் பண்ணுபவர்களும், மன்று பறித்து உண்பவர்களும், சிவன் சொத்துக்களை கண்கடை தெரியாமல் அனுபவிப்பவர்களும், மாடி மனை கோடி பணம் வட்டி வாடகைமூலம் இலவசமாக அனுபவிப்பவர்களும் இந்த நாட்டிலே கொடி கட்டிப் பறந்து குலாவி வலமாக வருகின்ற காலம் - உள்ள வரை யாம் செய்யும் தவம் அவமாகுமோ என்ற பயம் வாழ்வில் நெருக்கமாக இறுக்கியுள்ளது.

குறிப்பாக இலங்கையில் பஞ்சம், பசி, பட்டினி, வறுமை, உணவுத்தட்டுப்பாடு, களவு, மின்சாரம் - கட்டுப்பாடு, எரிவாயு - எரிபொருள் இன்மை, தொழிலின்மை, வீடு இன்மை, மது, போதை - பாவனை, கொள்ளை - இலாபமீட்டல், அறாவட்டி, கலப்படம், விபச்சாரம் ஆகியன தலை விரித்தாடும் தற்காலத்தினை ஒரு சவாலாக ஏற்று வாழ்வினை அவமாக்காது தவமாக்குவோம் என்பதே புண்ணியமான கைங்கரியமாகும்.

இலங்கையில் ஒரு நாளில் மட்டும் 5000 தொன் உணவு வீணாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதேவேளை உலகில் ஐந்து லட்சம்பேர் உணவின்மையால் மரணத் தறுவாயில் உள்ளனர். தினம் 5000 பேர் உணவின்மையால் உலகில் குற்றுயிராய் கூனிக் குறுகி மரணமாகியவண்ணமுள்ளனர்.

இலங்கையிலே மூன்று நேரச் சாப்பாட்டுடன், ஒருகோடியே முப்பது இலட்சம் மக்களும், இரு நேரச் சாப்பாட்டுடன் எழுபது இலட்சம் மக்களும், ஒரேநேரச் சாப்பாட்டுடன் பன்னிரண்டு இலட்சம் மக்களும், பட்டினியாக ஒரு வேளை மட்டும் ஏதோ உண்பவர்களாக ஏதோ சிலபல

*தோல்வியை நேசி. வெற்றியின் விளிம்பு உன் விழியருகே தெரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிகளோடு வாழ்கின்றார்கள். இப் பரிதாப நிலை தெரிந்தும் வறுமை நிலையில் வாடும் குடும்பங்களுக்கு தானங்களும் கொடைகளும் சென்றடையவில்லை என்பது மிகப் பெரிய குற்றச்சாட்டாகும். வறுமை நிலையிலுள்ள பாமர வர்க்க நிலை சராசரி உழைப்பாளிகளும், தொழிலாளிகளும் தர்ம காரியங்களிலும், தான காரியங்களிலும் பங்குகொண்டு பயன்பெற அவர்களுக்கு நேரமும் கிடைப்பதில்லை. குறுகியகால லீவும் வழங்கப்படுவதுமில்லை. தொழில் நிமித்தம் செய்யும் உடை நடை பாவனையோடு, அழுக்கு உடலோடு ஒரு கௌரவமான சபையில் அன்னதானங்களில் பசியாற முடிவதில்லை. மாறாக வசதியானவர்களும், வருமானம் உடையவர்களும், அரச உத்தியோகத்தர்களும் ஓய்வூதியர்களும், கொழுத்த சம்பளம் உடையவர்களும், தானங்களில் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இதன்மூலம் தவம் தானம் சிவமாக்கப்படுவதில்லை. ஆன்மீகத்தை எப்போது (இலங்கையில்) அரசியலாக்கினோமோ அன்றே தவம் குலைந்தது எனலாம்.

தவம் அவமாகியபடியால்தான், இலங்கை ஏனைய நாடுகளிடம் பிச்சை கேட்கின்றது. (கொழும்பு) அரசு இந்த நாட்டை தவநெறியில் ஆளாததினால் இரண்டேகால் கோடி மக்களும் பஞ்சம், பசி பட்டினியாலும், அடுக்களைப் பொருட்களினாலும், மருத்துவத் தேவைகளினாலும் தண்டனை அனுபவிக்கின்றனர். இதிலே தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள், பறங்கியர் என்று பசி பேதம் கொள்வதில்லை. எள்ளுத்தான் காயவேண்டும். எலிப் புழுக்கை ஏன் காயவேண்டும். இலங்கையில் எல்லோருமே வெய்யிலில் காய்ந்து வரிசையில் நிற்பதற்கு யார் செய்த பாவம்? யார் கொடுத்த சாபம்! அறுபத்தொன்பது இலட்சம் மக்களே அரியணை ஏற்றினர். அவர்களே அவர்களை வீட்டுக்குப் போகுமாறு போராட்டமும் நடாத்துகின்றனர். இ∴தென்ன? தவமா? அவமா? சாபமா? பாவமா? கோபமா?

தனி ஒருவனுக்கு உணவில்லையேல் இந்த ஜெகத்தினையே அழித்திடுவோம் என முழங்கிய சிம்மக் கவிஞர் இப்போதிருந்தால் கொழும்பு என்ன பாடுபட்டிருக்கும்?

பட்டினியால் இலங்கையில் மரணங்கள் நிகழ்ந்தவண்ணமுள்ளன. ஆனால் எல்லாம் வல்ல இறைவன் பணத்தாலும், பாலாலும், பெண்ணாம் பெரிய கட்டுமானங்களாலும், விலையுயர்ந்த திரவியங்களினாலும் கோடி கோடியாகக் கொட்டும் காசுமழையாலும் தடல்புடலான திருவிழாக் களினாலும் அற்புதமாகின்றான். இது பெரும் அதிசயமல்லவா?

இந்த மண்ணில் கொத்துக் கொத்தாக மக்கள் மடிந்தபோது, எந்தக் கடவுளும் கண்திறக்காத நிலையில் நாம் செய்த பாவந்தான் என்ன? அது ஆண்டவனின் சாபமா? அல்லது ஆண்டவனின் கோபமா? இது நியாயமா?

நாம் பெற்றுக்கொண்ட தண்டனை யார் கொடுத்த சாபத்தால் நிகழ்ந்தது? டாக்டர், என்ஜினியர், பேராசிரியர், மாதா, பிதா, குரு எல்லோருமே வரிசையில் நிற்பதற்கு நாம் செய்த அரைகுறை தவந்தான் காரணமோ? வேறொன்றுமில்லை யாம் புகழுக்காகவும் பலனுக்காகவும், பட்டம் பதவிகளுக்காகவும் விளம்பரமாவதே மூலகாரணமாகும். நல்லூரின் தவமதை வேறெங் கணும் காணமுடியவில்லையே! நல்லூரில் ஏழைகளும் முருகனோடு கதைப்பதற்காகவே ஒரு ரூபா அருச்சனைச்சீட்டு வரமாக்கப்பட்டுள்ளது. ஏனைய ஆலயங்கள் நல்லூரின்

*வாழ்க்கையில் திரும்பப் பெறமுடியாதவை உயிரும் நேரமும் சொற்களும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்மாதிரியை ஏன் பின்பற்ற முடியவில்லை என்பது வியப்பளிக்கிறது! மற்றும் பெரும்பாலான பாமர ஏழை மக்கள் இன்னுமே அடிமைகளாகவே கணிக்கப்படுகின்றனர். தெய்வமாக மதித்து போற்றப்படவேண்டிய விவசாயிகள்கூட இரண்டாவது மூன்றாவது பட்சமாகவே மதிக்கப்படுகிறார் கள். பஞ்சம், பசி, பட்டினி உணவுத்தட்டுப்பாடு ஏற்படும்போதுதான் விவசாயியின் படலை எல்லோருக்கும் தெரிகிறது. விவசாயியின் உழைப்புக்கும் உற்பத்திக்கும் உரிய பயன் கிடைப்பதில்லை. அவர்கள் இடைத் தரகர்களினால் உறிஞ்சப்படுகிறார்கள். இடைத் தரகர்கள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள். உண்மையாகவே நாட்டுக்கும் வீட்டுக்கும் வயிற்றுக்கும் உழைப் பவர்களான விவசாயிகளும் மலையகத் தொழிலாளர்களும் இலங்கையில் பேறாக்கப்படாத நிலையில் அவர்களது சாபமும், கோபமும், அனைவரையும் சும்மா விட்டுவைக்காது. ஒவ்வொரு பிரஜையையும் வாட்டி வதைத்தே தீரும்.

ஆன்மீகமும் அரசியலும் கட்டளைத் தளபதிகள் போல அவர்களின் கையில் அகப்பட்டு அல்லல்படுவதனால் பௌதீகக் கட்டுமானங்களே வீறுகொண்டு எழுந்து ஆவணமாகி பாவனையாகின்றன. உள்ளங்கவர்கள்வனாக, உள்ளம் பெருங்கோயிலாக, உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது என்பதாக அருளாளர்கள் எல்லைப்படுத்தி எம்மை ஏதுவாக்கியிருக்கும் நிலையில், கட்டுமானங்களையே சமயம் என்று காட்டி மாயைக்குள் அகப்பட்டு தத்தளிக்கிறோமே தவிர ஆணவ அகங்காரங்களும், பேராசைகளும் விடுவிக்கப்படவில்லை. சில சமய நிறுவனங் களில் செயலாளர், உபதலைவர், பொருளாளர், ஏனைய உறுப்பினர்களின் ஆளுமை வாண்மை ஆற்றல் வெளிக்கொணரப்படுவதில்லை. அவர்களுக்கு உரிய தலைமைத்துவத்தை வழங்காது அவர்களது ஆளுமையானது வறுமையாக்கப்பட்டுள்ளது. ஒன்றரை லட்சம் பேரின் கதி விதியினால் சமைக்கப்பட்ட நிலையில், எல்லாம் நான்தான், என்னைவிட யாருளர்? நானும் கடவுள்தான்! நான் சுத்தமானவன். நான்தான் உங்களின் செய்தி. நானே தலைவன்! என்னை நம்புங்கள் என்று இலங்கையில் பல தலைவர்கள் உதயமாகிவிட்டதனாலேயே இலங்கையின் தவம் அவமாக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இலங்கையின் நிதி நீதி நிர் வாகம் ஸ்தம்பிதமடைந்து அந்நியரின் கைக்குள் அகப்பட்டுவிட்டது. மக்கள் அடிமைகளாக்கி விடப்பட்டுள்ளனர். ஜனநாயக கைதிகளாக்கப்பட்டுள்ளனர். ஏழைகளின் கண்ணீர் இலங்கை முழுவதையுமே அழிக்கப்போகிறது. இதில் தெற்கு வடக்கு என்ற பேதத்திற்கு இடமில்லை. போரின் சாபம் இன்னுமே நீங்கியபாடில்லை! ஏழைகளின் வயிற்றினை நிரப்புங்கள்! புண்ணியம் கிடைக்கும். இதுவே தற்போதைய தேவையாகும்.

குருபூசை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஏப்ரல் | 01 | பங் 18 | சனி | யோகர்சுவாமிகள் |
| ஏப்ரல் | 08 | பங் 25 | சனி | காரைக்காலம்மையார் |
| ஏப்ரல் | 21 | சித் 08 | வெள்ளி | சிறுத்தொண்டர் |
| ஏப்ரல் | 23 | சித் 10 | ஞாயிறு | மங்கையர்க்கரசியார் |
| மே | 14 | சித் 31 | ஞாயிறு | திருநாவுக்கரசர் |
| மே | 25 | வை 11 | வியாழன் | நமிநந்தியடிகள், சேக்கிழார் |

*ஒருவர் துன்பப்படும்போது நிபந்தனை ஏதுமின்றி உதவுவதுதான் நட்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் தவமொழி

– திரு ஆ.தா.இ. ஜெயபாலன் அவர்கள் – (தொடர்ச்சி...

உலக பந்தங்களிலிருந்து விடுபட்டு இறைவனையே பற்றி நின்று தியானிக்கும் பெரியோர்களின் உணர்வைப்பற்றி கூறுகிறார் திருமூலர்.

பற்றற் றவர்பற்றி நின்ற பரம்பொருள்

(பற்று அற்றவர்- புலன்களுக்கு விஷயமான பொருள்களில் பற்று நீங்கிய ஞானிகள் பற்றி நின்ற பரம்பொருள்- பக்தி செலுத்தி பற்றிக் கொள்கின்ற அந்த பரம்பொருளாகிய இறைவனை)

கற்றற்றவர் கற்றுக் கருதிய கண்ணுதல்

(கற்று- ஞானம் அடைந்து அற்றவர்- துறவிகள் கற்றுக் கருதிய- ஞானத்தோடு தியானிக்கின்ற கண்ணுதல்- நெற்றிக் கண் இறைவனை)

சுற்றற் றவர்சுற்றி நின்றஎன் சோதியைப்

(சுற்று- சுற்றங்கள், உலக உறவுகள், அற்றவர்- களைந்த சந்நியாசிகள் சுற்றி நின்ற- மனத்தினால் அணைத்துக்கொண்ட என் சோதியை- ஞான ஒளியாகிய என் இறைவனை)

"என் சோதியை" என்று பக்தி அன்புப் பரவசத்தினால் தம் சொத்தாக இறைவனைக் காண்கிறார்.

பெற்றுற் றவர்கள் பிதற்றொழிந் தாரே.

(பெற்று உற்றவர்கள்- இறைவனுடைய அருளைப் பெற்றுக்கொண்டவர்கள் பிதற்று ஒழிந்தார்களே- இது அது என்று வாதாடுகின்ற பிதற்றலைவிட்டு மோன தியானத்திலே இறைவனோடு ஒன்றினார்கள்)

உலக உறவுகளைக் களைந்து ஞானத்தில் தேர்ந்து நெற்றிக் கண்ணனாகிய இறைவனைக் கருத்தில்கொண்டு இறைவனையே சுற்றுகின்ற மனத்தினராகிய ஞானயோகிகள் வாதப்பிரதிவாதங்களாகிய பிதற்றலை விட்டொழித்து மோன சமாதியிலே கூடுகிறார்கள் என்கிறார் தவயோகி.

பற்றற்றவர் பற்றி நின்ற பரம்பொருள்
கற்றற்றவர் கற்றுக் கருதிய கண்ணுதல்
சுற்றற்றவர் சுற்றி நின்றஎன் சோதியைப்
பெற்றற் றவர்கள் பிதற்றொழிந் தாரே.

இந்த உடம்பினுள் நின்று மனத்தை தீய வழிகளிலே இழுத்துச் செல்கின்ற ஐம்புலன்களை அடக்கி ஆண்டோமானால் தெய்வ இன்பம் பாலாகச் சொரியும் என்கிறார் தவயோகி. இந்தக் கருத்தை அழகிய உவமானம் சொல்லி ஒரு கதைபோலப் பாடுகிறார்.

*வெற்றி என்பது நிரந்தரமல்ல. தோல்வி என்பது இறுதியானதுமல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு

(பார்ப்பான்- பிரம்மன், பார்ப்பான் அகம்- பிரம்மன் கட்டிய வீடாகிய இந்த சரீரம் இதனுள் பாற்பசு ஐந்துண்டு- பால் கறக்கக்கூடிய பசுக்கள் ஐந்து உண்டு ஐம்புலன்கள்)

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தும் ஐந்து பசுக்கள்

மேய்ப்பாரு மின்றி வெறித்துத் திரிவன

(மேய்ப்பார்- மேய்ப்பதற்குரிய இடையன் இன்றி- இல்லாமல் வெறித்திரிவன- வெறி கொண்டு திரிகின்றன.)

இந்த ஐம்புலன்களை கட்டிக்காக்காது விட்டால் மேய்ப்பதற்கு இடையன் இல்லாத பசுக்களைப்போல் இவை வெறிகொண்டு திரியும்.

மேய்ப்பாரு முண்டாய் வெறியு மடங்கினால்

(மேய்ப்பாரும்- உண்டாய்- ஐம்புலப் பசுக்களை மேய்ப்பதற்குரிய ஞானம் கிடைத்து வெறியும் அடங்கினால்- இந்தப் பசுக்களின் வெறி அடங்கிவிட்டால்)

அதாவது ஞானத்தால் புலன்களை அடக்கி காத்தோமானால் இந்தப் பசுக்களுக்கு வெறி அடங்கிவிடும்.

பார்ப்பான் பசுவைந்தும் பாலாச் சொரியுமே.

(பார்ப்பான் பசு ஐந்தும்- பிரம்மன் படைப்பான இந்த பசுக்கள் ஐந்தும் பாலாய்ச் சொரியும்- பேரின்பமான ஞானப்பாலைப் பொழியும்)

பசுக்கள் அதே பசுக்களே அடங்காத நிலையில் அவை ஆன்மாவுக்கு கேடுதரும் விதத்தில் வெறியோடு விஷய இச்சைகளில் திரிகின்றன. இதே பசுக்களுக்கு காவல் ஏற்பட்டுவிட்டால், இந்தப் பசுக்களே ஞானப்பாலைச் சொரியும் என்கிறார்.

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரு மின்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரு முண்டாய் வெறியு மடங்கினால்
பார்ப்பான் பசு வைந்தும் பாலாச் சொரியுமே.

புலன்களாகிய பசுக்களை அடக்கியாள வேண்டும். அப்படி அடக்கினால் அதே புலன்கள் பேரின்பம் தரும் என்கிறார் தவயோகி.

இறைவனுடைய திருவருள் வெறும் ஏட்டுப்படிப்பினால் சித்தித்துவிடாது. இறைவனுடைய தன்மைகள், ஏட்டிலே எழுதி வைத்திருப்பதை படிப்பதனால் மட்டும் என்ன பயன்? ஆசாரியன் நேரிலே வந்து கூட்டுவிக்க வேண்டிய அனுபவம் அதுவாகும். இந்த உண்மையை தனது பாட்டின் மூலம் திருமூலர் கூறுகிறார்.

காட்டுங் குறியுங் கடந்தவர் காரணம்

(காட்டு எடுத்துக்காட்டு- உதாரணம், குறி- அடையாளம், கடந்தவர்- இந்த இரண்டிற்கும் அப்பாற்பட்டவராகிய இறைவன், காரணம்- மூலப்பொருள்)

இறைவனுக்கு உவமானமாகச் சொல்லக்கூடிய எடுத்துக்காட்டான பொருள் கிடையாது. அடையாளம் சொல்லவும் இயலாது. உதாரணமும் குறியீடும் கடந்தவர் இறைவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுங் குறியுங் கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்

(ஏட்டின் புறத்தில்- ஏட்டின்மீது. அதாவது புத்தகத்தில், என்ன பயன்- பயனேதுமில்லை)

தெய்வத்தைப் பற்றியும் கடவுளை அடையும் வழிவகைகளை ஏட்டிலே எழுதி வைப்பதால் மட்டும் நமக்கு பயனில்லை.

கூட்டுங் குருநந்தி கூட்டிடி னல்லது

(கூட்டும் குருநந்தி- தெய்வ அருளைக் கூட்டுவிக்கின்ற குருவாகிய நந்தி பெருமான், கூட்டின் அல்லது- அவனே ஆசாரியனாக எழுந்தருளி வந்து அந்த திருவருளை கூட்டுவித்தால் அல்லாமல்)

இறைவனே குரு உருவத்தில் வந்து ஞானத்தை உபதேசித்து, அவனுடைய அருளை நமக்கு கூட்டுவித்தாலன்றி புத்தகத்தில் எழுதி வைத்துள்ள அறிவானது

ஆட்டின் கழுத்தில் அதர்கிடந் தற்றே

(ஆட்டின் கழுத்தில்- ஆட்டினுடைய கழுத்திலே, அதர்- அதர் என்று அழைக்கப்படுகின்ற தொங்குதசை- பால் தரும் மடியைப்போல் தோற்றம் காட்டுகின்ற பயனற்ற சதைகட்கு தந்தே- தொங்கிக் கொண்டிருப்பது போலத்தான், அற்றே- போலத்தான்)

புத்தகங்களின் மூலம் நாம் கடவுளைப்பற்றி பெறுகின்ற அறிவு, ஆட்டின் கழுத்தில் சதைபோலத்தான்! அதைக் கொண்டு ஞானமாகிய பாலைக் கறக்கமுடியாது. மடியில் பால் சுரக்கும்படி செய்யக்கூடியவன் ஆசாரியன் ஒருவனே. வெறும் புத்தகப் படிப்பு என்பது பயனற்ற அதரைப் போன்றது.

காட்டுங் குறியுங் கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்
கூட்டுங் குருநந்தி கூட்டிடி னல்லது
ஆட்டின் கழுத்தில் அதர்கிடந் தற்றே.

இந்த சரீரத்தை கொண்டு தெய்வப் பேரின்பத்தை அடைகின்ற ஒரே வழி ஞான நோக்கோடு உள்முகமாக ஆன்ம உணர்விலே தியானம் லயித்து யோகத்திலே அமர்வதுதான். இந்த ஆன்ம யோகத்தின் சுகத்தை பூரணமாக அனுபவித்த தவயோகி அதை எப்படி வெளி யிட்டுச் சொல்வேன் என்ற பரவசத்தோடு ஓர் உவமானம் காட்டுகிறார்.

முகத்தில் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்கள்
அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்

(முகத்தில் கண் கொண்டு- புறக் கண்ணாகிய இந்த வெளிப்பார்வையை கொண்டு இதனால் காண்கின்ற மூடர்காள்- புறக்காட்சிகளைப் பார்க்கின்ற அறிவிலிகளே அகத்தில் கண்கொண்டு- உளமுகமாக பார்வையைச் செலுத்தி காண்பதே ஆனந்தம்- உணர்வு நிலையிலே தரிசனம் செய்வதுதான் ஞானானந்தம்)

இனி இந்த சுகத்தை எப்படி வெளியிட்டுச் சொல்வது தானே அனுபவித்து பார்க்கவேண்டிய ஒரே அநுபூதி அல்லவா அது!

மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்என்றாற் சொல்லுமா றெங்கனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண்ணானவள் தனது கணவனோடு அனுபவித்த இன்பத்தை திருமணப் பருவத்தை அணுகி நிற்கும் சிறுமிக்குச் சொல்வது அசாத்தியமானது. அதுபோல் இந்தக் கடவுள் இன்பத்தையும், அந்தப் பக்குவ நிலையில் அவரவர் ஞான முதிர்விலே தாமாக அனுபவமாக அனுபவிக்க வேண்டும் என்கிறார்.

முகத்தில் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்கள்
அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றால் சொல்லுமா றெங்கனே.

(தொடரும்...

## அபயம் அபயம் சற்குருநாதா

கணநாதனே கணபதியே குருநிதியே
கணமும் எனைப் பிரியா தருள்வாயே
துணையாய் என்றும் இருப்பாயே
அணையாவிளக்கே ஆனைமுகனே சரணமையா

ஆற்றங்கரை வீற்றிருந்தெனை ஆட்கொண்ட
வெற்றி வடிவேலவனே வேழமுகன் சோதரனே
பற்றறுத் தென்னைப் பணி கொண்ட பரஞ்சுடரே
வற்றா அருள்நிதியே சற்குருவே உமக்கபயம்

வழித்துணையாய் வாழ்வின் துணையாய்
விழித்துணையாய் வீற்றிருந்தெனக்கு
வழிகாட்டும் வாரணன் சோதரனே
வாழி வாழியென்று சரணடைந்தேன் சற்குருவே உமக்கபயம்

மின்சாரம் போல் மறைபொருளாய் நீயும்
மின்குமிழ் போல் காண்பொருளாய் நானும்
அன்பிற் கலந்து அகங்குழைந்தே
வான் சுடராய் வையமெங்கும் ஒளி வீச அருள்வாயே

இறைவா உனைக் கொழுகொம்பாய்க் கொண்டே
மறைபொருளாம் ஆன்மாவும் வள்ளிக் கொடியாய்
குறைவின்றிக் குமரா உனைப் பற்றிப் படர்ந்து
நிறைவாக நிற்பதுவே இறைநிலையா மென்றறியீரோ

முருகா நின் அருள்வெள்ளம் அகிலமெங்கும்
உருகிப் பாய்ந்தே மருளகற்ற வேண்டுமப்பா
திருவாய தெய்வத்தமிழ் துலங்க வேண்டுமுலகமெல்லாம்
குருவாக நீயிருந்துன் திருவருளைப் பொழிவாயே

தேன் தமிழின் இன்சுவையைப் பருக வேண்டின்
நான் யாரென்றறிந்து அனுபவிக்க வேண்டின்
வான் புகழ் கொண்ட வள்ளுவர் குறள் ஓங்க வேண்டும்
மன்னு தில்லைச் சிற்றம்பலவனின் திருவாசகமும் திகழ வேண்டும்

வாழும் கலையாம் கீதையின் பொருளை யுணரவேண்டும்
பாழும் இருள் களைய ஞானகுருவாய் நீ வரவேண்டும்
சூழும் வினையகல செய்தொழில் யாவுமே
முழு முதலாம் முருகனுக்கே அர்ப்பணமாக வேண்டும்.

நாவலரும் பாவலரும் மலரனையராவர்
ப வுலகில் தானதாயிருப்போர் காயனையர்
காயது களிந்து முற்றிச் செயலானால்
தாயாயிருந்து ஞாலமெங்கும் ஞானப்பாலூட்டிடலாம்

ஆதியே அரனே ஜோதியே சுடரே - உமையாள்
பாதியே பரனே பரம் பொருளே
நீதியே நித்தியனே நின்மலனே
நாதியற்றோர்க்கு நாயகனே நற்குருவே உமக்கபயம்.

-திருமதி பரமேஸ்வரி நடராஜா-

*உலகில் தேடித் தேடி அலைந்தாலும் மீண்டும் அமரமுடியாத சிம்மாசனம் தாயின் கருவறை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீறு

– செ. ஜடா அவர்கள் –

திருநீறானது சிவசக்தியின் வடிவமாகியுள்ளது. சம்பந்தசுவாமி பாடியருளிய திருநீற்றுப்பதிகமானது பரையின் வரலாறாகும். என்னும் ஆன்றோர் வாக்கு இதற்கு நேரான சான்றாகும். "நீற்றுப்பதிகம்- நிகழ்த்துங்காலை, மாற்றுப்பரையின் வரலாறாகும்" என்பது அவ்வாக்கு. "முத்தி தருவது நீறு" என்றும் "போதந்தருவது நீறு" என்றும் சம்பந்த சுவாமிகள் பாடியருளியதும் இதைக் காட்டுகின்றது. எவ்வாறெனில் ஆன்மாக்களுக்கு முத்தியையும் போதத்தையும் (சிவஞானம்) கொடுப்பது சிவசக்தி எனத் திருவருட்பயன் முதலிய ஞான நூல்கள் கூறுகின்றன.

திருநீறு முத்தியையும் போதத்தையும் கொடுத்தலால் அது சிவசக்தி என்பது பெறப்படுகின்றது. அதிலே சிவசக்தி சாந்நித்தியமாவதற்குச் "சிவசிவ" என்னும் மந்திரத்தையேனும் செபித்தல் வேண்டும். அநுட்டான முறையாகப் பூசும்போது பதினொரு மந்திரங்களும் அதிலே பதிக்கப்பட வேண்டும்.

திருநீற்றை உத்தூளனமாகவேனும் திரிபுண்டரமாகவேனும் தரிக்கலாம். "உத்தூளன மாவது பரவப் பூசுதல், திரிபுண்டரமாவது மூன்று குறியாகத் தரிப்பது. மூன்று குறியாகத் தரிக்கும்போது குறிகள் வளையாமலும் இடையறாமலும் ஒன்றையொன்று தீண்டாமலும் மிக அகலாமலும் இடைவெளி அதிகமிருக்கத் தரித்தல் வேண்டும். சிரம், நெற்றி, மார்பு, தொப்பூழ், முழந்தாள், புயங்கள், முழங்கைகள், மணிக்கட்டுக்கள், விலாப்புறங்கள், முதுகு, கழுத்து என்னும் பதினாறு இடத்தும் குறி தரிக்கலாம். நெற்றியில் இரண்டு கடைப்புருவ எல்லை நீளமும், மார்பிலும் புயங்களிலும் அவ்வாறங்குல நீளமுமாகத் தரிக்கவேண்டும்.

திருநீற்றுக்கு மேலே சந்தனமேனும், குங்குமமேனும் அணிதலாகாது. இவற்றைத் திருநீற்றுக்குக் கீழே புருவ நடுவிலே தரிக்கலாம். காலையிலும் மதியத்திலும் மாலையிலும் ஸ்நானஞ் செய்தவுடனும், பூசைக்கு முன்னும் பின்னும், போசனத்துக்கு முன்னும் பின்னும், நித்திரைக்கு முன்னும் பின்னும், மலசல மோசனஞ் செய்து கால் கழுவிய பின்னும், தந்தசுத்தி செய்த பின்னும் திருநீறு அவசியம் பூசுதல் வேண்டும்.

திருநீற்றின் மகிமை சம்பந்தசுவாமிகள் பாடியருளிய திருநீற்றுப் பதிகத்திலும் வேதங்களிலும், அநேக உபநிடதங்களிலும் நன்றாக விளக்கப்பட்டிருக்கின்றது. ப்ருகத்ஜாபால உபநிடதத்திலே (1/14 திருநீற்றுக்கு ஐந்து பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன:

விபூதி (மேலான செல்வத்தைக் கொடுப்பதும்), பசிதம் (ஒளியைத் தருவது), ஒளி (ஞானம்), பஸ்மம் (பாவங்களை நீறாக்குவது) க்ஷாரம் (தடைகளை அறுப்பது), இரட்சை (காப்பது) என்பனவாம். ஒருவன் திருநீறு பூசினால், அத்திருநீறு படிகின்ற ஒவ்வொரு மயிர்த்துவாரமும் சிவலிங்கமாகின்றதென்றும், அதிலே சொல்லப்பட்டிருக்கின்றது. காலாக்நி ருத்ரோபநிஷத்திலே திரிபுண்டரத்தின் முதற்குறி. பிரணவத்தில் அகரத்தையும் கிரியாசக்தியையும், மகேஸ்வரனையும் குறிக்கின்றது என்றும், இரண்டாவது குறி உகரத்தையும் இச்சாசக்தியையும் சதாசிவனையும் குறிக்கின்றது. என்றும் மூன்றாவது குறி மகரத்தையும் ஞானா சக்தியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாதேவனையும் குறிக்கின்றது என்றும் ஏழாம் எட்டாம், ஒன்பதாம் மந்திரங்களிற் சொல்லப் பட்டிருக்கின்றது.

"ஆதியின்மேல்
"உற்ற திருநீறுஞ் சிவாலயமும் உள்ளத்துச்
செற்ற புலையர்பாற் செல்லாதே"

-நெஞ்சுவிடு தூது.

திருச்சிற்றம்பலம்

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பக்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சக்தி தருவது நீறு திரு வாலவா யான்திருநீறே.

-தேவாரம்.

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு வாலவா யான்திருநீறே.

திருச்சிற்றம்பலம்.

## சந்நிதி வேலனே வேல் முருகா

சந்நிதி யானே வேல் முருகா - எங்கள்
சங்கடம் தீர்ப்பவா வேல் முருகா
எந்நிதியும் தரும் வேல் முருகா
எங்கள் பிழை பொறுப்பவா வேல் முருகா
(சந்நிதியானே)

முன்வினை களைபவா வேல் முருகா
முத்தி அருள்பவா வேல் முருகா
அன்புடன் அடியார் அழைக்கவே வேல் முருகா
ஆனந்தம் அடைவாயே வேல் முருகா
(சந்நிதியானே)

திங்களைப் போல் ஒளி காட்டும் வேல் முருகா
தீரா நோய் தீர்த்தருளும் வேல் முருகா
எங்கும் நிறைந்தவா வேல் முருகா
ஏகாந்தப் பரம் பொருளே வேல் முருகா
(சந்நிதியானே)

பங்கம் வராது எமைக் காப்பவா வேல் முருகா
பரமன் திருமகனே வேல் முருகா
எங்களின் துணைநீயே வேல் முருகா
எதிலும் வெற்றி அருள்பவா வேல் முருகா (சந்நிதியானே)

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*தவறுகளில் இருந்து கற்றுக்கொள்ளுங்கள் வாழ்வு இனிக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி....

# ஆனந்த சாகரம்

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன் அவர்கள் –

## கண்கண்ட தெய்வம்

இறைவனைத் தாயாகக் கொண்டாடி பக்திசெய்வது வழக்கம். பரமாத்மா நாம் எப்படி நினைத்தாலும், அந்தரூபமாக வந்து அனுக்கிரகம் செய்கிற கருணை பரமாத்மாவுக்குண்டு. பரப்பிரம்மமே தாயாகி, அம்பிகையாக நமக்கு அனுக்கிரகம் செய்கிறார். தாயிடம் நமக்குள்ள ஒப்பற்ற உறவும் அன்பும், அம்மாவுக்கு நம்மிடமுள்ள அன்பும் ஆனந்தமயமானது. அன்னையின் இயல்பு என்றும் மாறாது. தொழுத கைகளோடும், அழுத கண்களோடும் தன்னிடம் வந்தவர்களுக்கு அல்லல்களையும், இன்னல்களையும் அழித்தொழிப்பவள் அன்னை அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி. உலக மாதா கருணை பொழிவதற்காகவே காத்திருக்கிறாள்.

அம்பிகை துர்க்கையாகவும், மகாலட்சுமியாகவும், சரஸ்வதியாகவும் ஆன்மாக்களுக்கு அருள்புரிகின்றாள். அழியாச் செல்வமாகிய கல்வியை அருள்பவள் சரஸ்வதி. அந்த அன்னத்தை நெஞ்சத் தாமரையில் வைத்து, வேறு எந்தக் கவலையுமின்றி எல்லையில்லாத ஆனந்தக்கடலில் மூழ்குவது எப்போது என ஏங்கவேண்டும். சரஸ்வதி, கலைவாணி, நான்முகனின் நாயகி, சாரதை, கலைமகள், நாமகள், ஞானாம்பிகை, வாணி, அன்னவாகினி, பாரதி எனப் பல்வேறு நாமங்களால் போற்றப்படுகின்றாள். கல்விக்கு, ஞானத்திற்கு, வித்தைக்கு அதிபதி. வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள். எல்லா உயிர்களின் நாவிலும் இருப்பவள். ஆய கலைகள் அறுபத்தி நான்கின் நாயகி. சங்கீத வீணாபாணி, தூய உள்ளத்தினுள்ளே இருப்பவள்.

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை
தூய உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே
இருப்பள் இங்கு வராதிடர்.

(கம்பர்)

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பாடிய சகலகலாவல்லி மாலையில் வெண் தாமரையிலே வீற்றிருக்கின்ற தேவியை தனது தூய உள்ளக் கமலத்தில் உறைய வேண்டுகிறார். பொருட்சுவை சொற்சுவை தோய்ந்த நாற்கவி பாட நல்லருள் தருமாறு வேண்டுகிறார். கலைமகள் அருட்கடலில் குளிக்க விரும்புகிறார். வாக்கும், கல்வியும் பெருகிடச் செய்யுமாறு காக்கும் கருணைக் கடலாகிய அன்னையை வேண்டுகிறார். பொற்பாதங்கள் நெஞ்சத் தடத்தினிலே நிலவ வேண்டும். அன்பர் கண்ணும் கருத்தும் நிறைந்த சகலகலாவல்லிமாலையை பண்ணும், பரதமும், கல்வியும் நல்கிட வேண்டுகிறார். பாட்டும் பொருளும் பயனும் கூட்டும்படி கடைக்கண் நல்கவேண்டும். சொல்விற்பனவும், அவதானமும், கவிசொல்ல வந்த நல்வித்தையும் தந்து அடிமைகொள்ளுமாறு கல்விப் பெருஞ் செல்வப் பேறிடம் வேண்டுகிறார். சொற்கும், பொருட்கும் உயிராய் இருப்பவள். மன்னர் தம்மையும் தன் பண்கண்டளவில் பணியச் செய்யுமாறு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கோடி தெய்வங்கள் இருந்தாலும் உன்னைப் போல் கண்கண்ட தெய்வம் உளதோ என வேண்டுகிறார்.

"மண்கண்ட வெண்குடைக் கீழாக...."
அறிவாள் நெஞ்சில் ஆடிக்களிக்கும் மயிலே உன்பாதம்
அடைக்கலமே! அடியேனையும் உவந்து ஆண்டருளே!
செந்தமிழ்ப் பாவையே, மடமயிலே அல்லும், பகலும் அநவரதமும்
துதித்தால் கல்லும் கவி சொல்லும்!

கம்பர் சரஸ்வதி அந்தாதி பாடினார். ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் அருளும் அன்னையை கம்பர் தன் நெஞ்சிலும், நாவிலும் கண்டு பாடினார். "தூய உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே இருப்பள்" என்னும் வாசகத்தை நம் உள்ளத்திலே இருத்த வேண்டும்.

குமரகுருபரர், கம்பர், பாரதியார், காளமேகப்புலவர், தேசிக விநாயகம்பிள்ளை இன்னும் பல அருளாளர்கள் அன்னையைப் போற்றிப் பாடி அருள்பெற்றார்கள். குமரகுருபரர் டெல்லியை ஆண்ட பாதுஷா மன்னரோடு பேசுவதற்கு இந்துஸ்தானி மொழி பேசும் திறன் வேண்டி கலைமகளைத் துதித்து "சகலகலாவல்லிமாலை" தோத்திரப்பாடல்களைப் பாடி அந்த மொழி பேசும் சக்தியைப் பெற்றார். மன்னரோடு அன்னையின் அருளால் இந்தி மொழியில் பேசினார்.

கலைவாணியை நெஞ்சிலும், நாவிலும் கொண்ட அன்பரால் பாடப்பட்டமையால் பக்தியோடு ஓதும்போது ஓதுவோரது நெஞ்சிலும், நாவிலும் அன்னையை உறையச் செய்யும் ஆற்றல் அதற்குண்டு. படிக நிறமும், பவளச் செவ்வாயும், கடிகமழ் பூந்தாமரை போற் கையும் துடியிடையும் கொண்ட அன்னையை அல்லும், பகலும் அநவரதமும் துதித்தால் கல்லும் கவி சொல்லும். செந்தமிழ்ப்பாவை, நான்மறை உரைப்பவள், கலையது தந்து இங்கெனை வாழ்வித்த மாமயிலே, கலைமகளே, அடியேனையும் உவந்து ஆண்டருளே!

எனை ஆளும் மடமயிலே, வேறு தவம் பயிலேன்; மகிழ்ந்து பணிவேன் உனது பொற்பாதங்களே! பாதார விந்தத்தில் பணிவார் தமக்குப் பல கலையும் வேதாந்த முத்தியும் தந்தருள் பாரதி என் சிந்தையுள்ளே இருப்பதால் எனக்கு அரியது ஏதும் இல்லை. நான்முகன் நாயகியை, புத்தகம் ஏந்திய கரத்தாளை, அகிலாண்டமும் பெற்ற தாயை கலைமகளை யான் மறவேன். தேவரும், தெய்வப்பெருமானும், நான்மறை செப்புகின்ற மூவரும் தானவராகி உள்ளோரும், முனிவர்களும், ஏனைய எல்லா உயிரும் பணியும் நாவளர் செல்வி என் சிந்தையின் இருளை நீக்கிடுவாய். ஆதியும் அந்தமுமானவள். வெண்தாமரை நாயகியே! எவ்வுயிர்க்கும் தாயே உரைமகளாய் வருபவளே! மனக்குற்றம் மாற்றும் மருந்தே! கமலந்தன்னில் உறையும் கலைமகளே! தெய்வ மடந்தையர் போற்றும் தெய்வமே! எனைஆள்வார் வேறில்லை! ஐம்புலன் வழியிற்சென்று மயங்காமல் நின் மலர்த்தாள் நெறியிற் செல்வதற்கு அருள்வாய்!

ஆதிக் கலாபமயிலின் பொற்றாளை அடைந்தவர்கள் பலவகை நலமும், முத்தியும் பெறலாம். வேறு யாரைத் தொழுவேன் இனி! கலங்கும்போது தெளிவிக்கும் கலைமகளே! அருளாய் விளங்கும் அன்னையே! என் நெஞ்சிலும் நாவிலும் நிற்கும் பெருந் திருவே! என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதை நெஞ்சில் இருந்தருள்வாய்! சரஸ்வதி எனும் திருவே! எக்காலமும் உன்னைத் தொழுவோம். எம் பெருமாட்டி! எம்மிடர் தீர நோக்காய். ஞானக் கொழுந்தே! சகல கலை களையெலாம் தருவாய்! நலமெலாம் அருள்வாய்! நெஞ்சம் உருகிப் பாட நாவிலே நர்த்தனம் செய் சரஸ்வதியே! ஆனந்தரூபிணி! கள்ளம் கபடமொழித்து உள்ளம் குழைய பாட அருள்வாய்!

கடவுள் நம்முள்ளத்தினுள்ளே நந்தா விளக்காக ஒளிர்கிறார். நவராத்திரி காலத்தில் கடவுளை அம்மையாக நினைந்து வழிபடுகிறோம். அன்னையைப் போற்றும் தோத்திரங்களில் சரஸ்வதி அந்தாதியும் ஒன்று. கவிச்சக்கரவர்த்தி கம்பர் அம்மையைத் தன் நெஞ்சிலும், நாவிலும் கண்டு பாடினார். இப் பாடல்களைப் பொருளுணர்ந்து பாட அம்மை நம் நெஞ்சிலும் உறைவதை உணர்ந்து இன்புறலாம்.

"ஆய கலைகள்" எனத் தொடங்கும் காப்பு வெண்பாவிலே "தூய இருப் பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே இருப்பாள்" என்பதுவும் இறுதிச் செய்யுளிலுள்ள, "என் பேதை நெஞ்சில் இருந்தருளும் செஞ்சொல்வஞ்சி" என்பதும் எம் நினைவில் நிறுத்த வேண்டியது. அம்மை வீற்றிருக்கும் வெள்ளைத் தாமரை அன்பரது வெள்ளையுள்ளத் தண்டாமரையாகும். அந்தாதியின் முதற்பாடலில் என் மனத் தாமரையாட்டி என வரும் செஞ்சொல் அம்மையை எம் மனத்திலும் எழுந்தருளச் செய்யவல்லது.

சீரதந்த வெள்ளிதழ் பூங்கமலா சனத்தேவி செஞ்சொல்
தார்தந்த என்மனத் தாமரையாட்டி சரோருகம் மேல்
பார்தந்த நாதன் இசைதந்த ஆரணப் பங்கயத்தாள்
வார்தந்த சோதி அம்போருகத்தாளை வணங்குதுமே.

அம்மை விரும்பி உறையும் அன்றலர்ந்த புதுப்பூ மனமாகிய மலர். பூக்கொண்டு பூசிக்கும் அன்பர் தம் சிந்தையில் உறைபவள். அம்மை நம் நெஞ்சிலிருந்து நம் நெஞ்சத்து அழுக்கையெல்லாம் போக்குகிறாள். அம்மை வேதத்தை இருப்பிடமாகவும் படையாகவும் கொண்டிருப்பது அறிவால் அழுக்ககற்றுவதற்கேயாகும். புறவிருளைப் போக்கும் கதிரவனைப் போல் அகத்தில் உறைந்து அக இருளை நீக்கும் அம்மையின் பேரருளாகும். அம்மை நம் நெஞ்சிலுறைந்து அகவிருளை நீக்கி, அழுக்கு மலம் அகற்றி அருளுவதால் நாம் பல கலைகளையும் அறியலாம். ஈற்றில் முத்தியும் பெறலாம். ஆதலால் பெறல் அரிதாவதொன்றில்லை.

பாதாம் புயத்தில் பணிவார் தமக்குப் பலகலையும்
வேதாந்த முத்தியும் தந்தருள் பாரதி வெள்ளிதழ்ப்பூம்
சீதாம் புயத்திலிருப்பாள் இருப்ப என் சிந்தையுள்ளே
ஏதாம் புவியில் பெறலரிதாவது எனக்கினியே.

(தொடரும்..

---

ஒரு முட்டாள்தான், தனது உயர்ந்த படிப்பையும், புத்திசாலித்தனத்தையும் பற்றிய பெருமை அடித்துக்கொள்வான். ஆனால் அவனையே அவனுக்குத் தெரியாது. தனது தீய குணங்களை விட்டு விலகிவிட முடியாதபோது, என்ன கல்வி கற்றும் என்ன பலன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ண சாஸ்திரங்கள்

**– திரு இராம. ஜெயபாலன்** அவர்கள் –

பிறப்பினால் மனிதர்களை வர்ண சாஸ்திரங்கள், இளிவுபடுத்துகின்றன என்ற குற்றச் சாட்டுக்களை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முதலில் சாதீயம் என்றால் என்ன? என நோக்கினால், நிலம் (திணை) சார்ந்து பரந்துபட்டு வாழ்ந்த இனக் குழுக்களே, அவர்களின் தனித்துவங்களை அடையாளப்படுத்த, சாதியப் பேரால் அழைக்கப்பட்டார்கள். உதாரணம் காட்டிலே வேட்டையாடுபவர்கள் வேடுபவராக வும், வேளாண்மை செய்பவர்கள் வேளாளர்கள் ஆகவும், இரண்டிற்கும் இடையில் இருந்தவர்கள் இடையர்களாகவும், இவ்வாறு நிலம் சார்ந்து பல சாதிப் பிரிவினர்கள் இருந்தாலும், எல்லாச் சாதிகளிலுமே பல் தொழில்முறைகள் இருந்திருக்கின்றன. இந்தவகையில் எல்லாச் சாதிகளில் இருந்து, அரசர்கள் உருவானாலும், அரசர்கள் தமது அந்தஸ்துக்களை நிலை நிறுத்திக்கொள்ள வம்சங்களை உருவாக்கினார்கள். அதேபோல், எல்லாச் சாதிகளில் இருந்து, சமயச் சடங்குகள் செய்யும் குருமார்கள் உருவானாலும் அவர்களும் தமது அந்தஸ்துக்களை நிலைநிறுத்திக் கொள்ள, கோத்திரங்களை உருவாக்கிக் கொண்டார்கள். இவர்களுக்கு அடுத்தபடியாக எல்லாச் சாதிகளில் இருந்தும், வர்த்தகர்கள் உருவானாலும் இவர்களும் தமக்கான குலங்களை உருவாக்கியும் கொண்டார்கள். இருந்தபோதும் பரிணாமமடையாது அந்தந்த சாதிகளிலேயே, மன்னர்கள், சமயக் குருமார் மற்றும் வர்த்தகர்கள் தொடர்ந்தும் இருந்துவந்தமை இந்தப் பரிணாமங்களுக்கு சான்றாக விளங்கியது.

இவற்றை மகாபாரதம் மிகத் தெளிவாக அடையாளப்படுத்தியுமுள்ளது. அதாவது பாண்டு மன்னன் சந்திர வம்சத்திற்கு குறியீடாக இருந்தபோது பாண்டவர்கள் எவரும் பாண்டுவுக்கு புதல்வர்களாகப் பிறக்கவில்லை. மாறாக நில அடையாளங்களை பிரதிநிதித்துவப் படுத்தும் தேவர்களுக்கு பிள்ளைகளாகவே பிறந்தார்கள். முக்கியமாக, முல்லை (சுடலை) நிலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் யமதருமனுக்குப் பிள்ளையாக, தருமரும், மருத (வயல்) நிலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்திரனுக்கு புதல்வராகவே, அரிச்சுனனும் அடையாளப் படுத்தப்படுகின்றனர். இவ்வாறு பரிணாமங்கள் இடம்பெற்றாலும், ஸ்ரீ கிருஸ்ணர் இடையர்குல அரசனாக சந்திரவம்சத்தைச் சாராது இருந்தபோதும், சந்திர வம்ச அரசர்களுக்கு உறவினர் களாகவும் காட்டப்படுகின்றார்.

மேலும் பிறப்பை அறியமுடியாது தேரோட்டியின் வளர்ப்பு மகனாக இருந்த கர்ணன் அரசனாக முடிசூடிக்கொள்ள முடிந்தமை, ஒருவன் அரசனாக வேண்டுமானால், அதற்குரிய அங்கிகாரங்கள் அவசியமானாலும், பிறப்பினால் வரவேண்டிய அவசியமில்லை என்பதும், முன்பகை காரணமாக பிராமணரான பரசுராமர் கர்ணனுக்கு சாபமிட்டது, கர்ணனுடைய வீரத்தினால் அன்றி கர்ணனுடைய பிறப்பினால் அல்ல காரணம். அந்தணர் வேசமிட்டு கர்ணன் பரசுராமரிடம் கல்வி கற்ற காலத்தில், பரசுராமர் தனது தவ வலிமையால் கர்ணனின் பிறப்பைக் கண்டுபிடிக்கவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. எவ்வாறாயினும் அங்கீகாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாது, எவரும் தமது கைகளில் ஆயுதங்களை எடுக்கக்கூடாது என்பதற்கு குறியீடாக ஏகலைவனும் சொல்லப்பட்டு இருக்கின்றான்.

மகாபாரதம் என்பது மக்கள் புரட்சிகளுக்கு அடையாளம். ஆனால் எதிர்காலச் சந்ததிகள், கட்டுப்பாடுடன் கூடிய வழிநடத்தல்கள் அவசியம் என்பதையும் காட்டுகின்றது. கண்டபடி எல்லோரும் தமது கைகளில் ஆயுதங்களை எடுத்தால் மனித சமூகத்தில் அமைதி என்பது சாத்தியமில்லாது போயிருக்கும் என்பதையும் உணர்த்துகின்றது. தவிர மகாபாரத யுத்தத்தின் நடுவே, பகவத்கீதை மனிதர்களை கட்டுப்பாடுகளுடன் நெறிப்படுத்தவே உருவானது. மேலும் இந்து மதத்தில் அடிப்படை வாதங்கள் உருவாகாமல் இருக்க, இந்துமத சித்தாந்தங்கள் தீர்க்க தரிசனத்துடன், ஆவணப்படுத்தப்பட்டமையும் முக்கிய காரணமாகும்.

இந்தவகையில் வர்ணசாஸ்திரங்கள் என்றால் என்ன? என நோக்கினால் அனுபவங்களை குறியீடாகக் கொண்டு மொழி, அறிவினை உணர்த்துவதற்கு பல்வேறு யுத்திகளைப் பயன் படுத்தியுள்ளது. இந்தவகையில் அரச நிர்வாக இயக்கத்தை மனித உடலியக்கத்துடன் ஒப்பிட்டு நோக்கியிருப்பதே வர்ண சாஸ்திரங்களுக்கு அடிப்படை. முதலில் மூளைதான் உடலியக்கத்திற்கு முக்கிய பங்காற்றுகின்றது. அதுபோல் நிர்வாக இயக்கங்களுக்கு அடிப்படையாக இருப்பது அரசியல் அமைப்பாகும். ஆனால் அன்று எழுதிப் பாதுகாக்கும் முறை மொழியில் உருவாகுமுன், தெய்வ சக்திகளே அறநெறிகளைப் பாதுகாத்து அரசர்களை கட்டுப்படுத்தும், மெய்ஞான தொழில்நுட்பமாக இருந்த காலத்தில் சமய குருமாரே தலையாகச் செயற்பட்டார்கள். அரசர்கள் உடல் வலிமை இருந்தாலே மக்கள் பாதுகாப்பாக வாழமுடியும் என்பதை உணர்த்தவே தோள்கள் அரசர்களை குறித்து நின்றது. மூளையும் உடல் வலிமையும் மட்டுமிருந்தால் அரச நிர்வாகம் சீராக இயங்கமுடியாது. இருதயம் இரத்தத்தை உடல் முழுதும் பாய்ச்சுவதுபோல் வர்த்தகர்கள் நாடு முழுவதும் உணவு, உடை மற்றும் வாழ்வியல் உபகரணங்கள் கிடைக்க வழிசெய்ய வேண்டியிருப்பதால் அவர்கள் மார்புப் பகுதியை குறியீடாகக் காட்டப்பட்டு இருக்கின்றார்கள்.

இந்த உடல் இயக்க சூத்திரத்தில் மக்களே அனைத்தையும் தீர்மானிக்கும், காரணிகளாக இருந்தார்கள். அதாவது உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லோரும் தொழுதுண்டு பின் செல்வார் என்ற கூற்றுக்கு அமைவாக, மன்னனுக்கு வரியாகவும், சமய குருமாருக்கு தானமாகவும், மற்றைய தொழில் செய்பவர்களுக்கு விளைபொருள்களே ஊதியமாக தந்து, மனித வாழ்வியக்கங்களின் முக்கிய ஊன்றுகோள்களாக கால்கள் இருப்பதுபோல் இருந்தார்கள் விவசாயிகள்.

மேலும் மக்கள் யுத்த அழிவுகளையும் பஞ்சம் பட்டினி நோய் நொடிகளை தாங்கி நிலைகுலையாமல் இருந்தால் மட்டுமே, அரச இயந்திரங்கள் செயற்பட முடியும். அரசர்களும் மக்கள் ஆதரவு இருந்தால் மட்டுமே, நிலைகுலையாது செயற்படவும் முடியும். மேலும் இறைவனின் விதிப்பிரகாரமே அனைத்தும் இடம்பெறுவதால் இறைவனின் தலையில் இருந்து பிராமணர்கள் தோன்றியதாகச் சொல்லப்பட்டாலும், மகாபாரத யுத்தத்தில் இடையரான ஸ்ரீ கிருஸ்ணரே மூளையாகச் செயற்பட்டதுபோல், வரலாறுகளில் பல்வேறு அறிஞர்கள் அரசர்களுக்கு மூளையாக செயற்பட்டு இருக்கின்றார்கள்.

*சிக்கல்களை எதிர்கொள்ளும்போது கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 69

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 தன்மனதை நோகாமல் பாதுகாத்தால் மட்டும்
பின்னாலோர் எண்ணரிய சமுதாயம் தோன்றாது
மண்ணுலகோர் மனங்களைநாம் நோகாமல் காத்தால்தான்
பொன்னுலகம் போற்றிடுமோர் சமுதாயம் உருவாகும்.

02 நம்முள்ளம் வலிக்காமல் இருந்திட்டால் மட்டும்
இம்மையிலோர் இனிமையுறு சமுதாயம் தோன்றாது
எம்மைப்போல் பிறருள்ளம் வலியின்றி இருந்தால் தான்
செம்மையுறு சமுதாயம் செகமிதனில் உருவாகும்.

03 கறிவேம்பைப் போட்டுத்தான் கறிவேண்டும் என்றில்லை
பரிமாறும் போதிலே பரிவிருந்தால் போதுமாகும்
பரிவில்லாப் பரிமாறல் மணமேதும் கொடுப்பதில்லை
மணமில்லாக் கறிகூட பரிவிருப்பின் மணங்கமழும்.

04 சீனிபோட்ட பாணம்தான் இனிமைதரும் என்றில்லை
அன்புடைய நெஞ்சங்கள் அதைவிடவும் இனிமைதரும்
அன்பின்றி இனிப்பதெல்லாம் பின்னொருநாள் கசப்பாகும்
கசத்தாலும் கசப்பதெல்லாம் அன்பிருப்பின் இனிப்பாகும்.

05 பொன்னாடை பொற்கிழிதான் பெருமைதரும் என்றில்லை
பண்புடையோர் பாதணிகள் சுமப்பதுமோர் பெருமையேதான்
பண்புடையோர் பாதணியைச் சுமப்பதற்கு தயங்கிடுவோர்
பொன்னாடை பொற்கிழிகள் சுமப்பதுமோர் சுமையேதான்.

06 உடமைபல உள்ளோர்தான் உயர்ந்தவர்கள் என்றில்லை
கடமைதனைச் செய்வோரும் காலத்தால் உயர்ந்தவர்தான்
கடமைதனைத் தவறவிட்டு உடமைதனைக் கொண்டிருப்போர்
உடமைகளில் உயர்ந்திடலாம் உள்ளத்தால் தாழ்ந்தவரே!

*வாய்ப்புக்காக காத்திருக்காதே. வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 பட்டங்கள் பதவிகள்தான் கௌரவம் என்றில்லை
பாடுபட்டு உழைப்பதுவும் உயர்ந்தோர் கௌரவம்தான்
பாடுபட்டு உழைக்காத பட்டமும் பதவிகளும்
பட்டமரக் கொப்புநட்டுப் பழம்கீறி விடல்போலாம்.

08 உண்ணுகின்ற உணவிலேதான் இறைமார்க்கம் என்றில்லை
எண்ணுகின்ற எண்ணத்திலும் இறைமார்க்கம் அதிகமுண்டு
உணவதில் புனிதத்தை உரியபடி பேணுதல்போல்
எண்ணத்தில் புனிதத்தைப் பேணுடுவீர் இறையடைவீர்.

09 புறச்சுத்தம் தன்னிலேதான் இறைமார்க்கம் என்றில்லை
அகச்சுத்தம் தன்னிலேதான் இறைமார்க்கம் அதிகமுண்டு
புறச்சுத்தம் பேணுவதற்கு புனல்கொண்டு கழுவுதல்போல்
அகச்சுத்தம் பேணுவதற்கு அகம்பாவம் போக்கிடுவீர்.

10 அணிகின்ற அணிகளில்தான் இறைமார்க்கம் என்றில்லை
பணிகின்ற பணிவிலேதான் இறைமார்க்கம் அதிகமுண்டு
அணிகலத்துப் பலாபலன்கள் வணிகமாயும் முடிந்திடலாம்
பணிவினையே அணியாக்கும் பலாபலனாய் இறையடைவீர்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

| **காசுக்கட்டளை** | **காசோலை** |
|---|---|
| செ. மோகனதாஸ் | செ. மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க.இல – 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| தொ.இல – 0213219599, 0212263406 | பருத்தித்துறை. |

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

***துன்பங்களைச் சந்திக்கத் தெரிந்தவனுக்கு தோல்வியே இல்லை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசையும் அவலமும்

**– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு** அவர்கள் –

பந்தம், பாசம், பற்றுக்கள் பலம் வாய்ந்தவையா என்பது பற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக்கொள்வோம்.

பற்றுக்களின் இருப்பிடம் ஆசை. ஆசை எம்மை விலங்காக்கும். அன்பு எம்மை மனிதனாக்கும். அருள் எம்மைத் தெய்வமாக்கும்.

எம்மை நாம் சுய விமர்சனம் செய்யும்போது எம்முள் மறைந்திருக்கும் சுய தன்மை எமக்குப் புலப்படுகின்றது. இந்நேரத்தில் நாம் மனிதனாகத் திருந்த வாய்ப்புண்டு. சுய விமர்சனம் மனிதனைத் தெய்வமாக்கவும் வாய்ப்புண்டு. சமய குரவர்கள் அருளாளர்கள் தம்மை தெய்வ அருளோடு ஒன்ற வைத்து தெய்வனுபவங்களைப் பெற்று அற்புதங்கள் புரிந்தார்கள். மண்ணிலே உலாவிய தெய்வங்களாக அவர்கள் மக்களுக்கு காட்சி அளித்தார்கள்.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என வாழும் மார்க்கத்தையும், எமக்கு வாழ்ந்து காட்டியவர்கள் அவர்கள்.

அதேநேரம், தெய்வநிலையிலும் ஆசைவயப்பட்டால் விலங்காக மாற வாய்ப்பு உண்டு என்பதுவும் உண்மை. இதற்கு உதாரணமாக ஒரு கதை சொல்லட்டுமா?

நகுஷன் என்பவன் 100 அசுவமேத யாகங்களை ஆற்றிய பெருமையை உடையவன். அவனைத் தேடி இந்திரப்பதவியே வந்ததென்றால் பாருங்களேன்! அத்தனை அருள் வலிமை பெற்றவன் அவன். அகத்தியர் உட்பட பெருமையும் மகிமையும் மிக்க ஏழு ரிஷிகள் அவன் புகழ்கேட்டு அவனைக் காண வந்தனர்.

தன் பண்பாட்டை பணிவுமூலம் காட்டி அவர்களை வரவேற்றான் நகுஷன். இந்திரப் பதவி ஏற்க, இந்திரலோகம் செல்ல, அவனுக்குப் பல்லக்கு காத்திருந்தது. அவனது பல்லக்கைச் சுமந்து செல்லத் தயாரானார்கள். அந்த ஏழு ரிஷிகளும், அகத்தியர் உட்பட. நகுஷன் நடுங்கினான்.

"ரிஷிகள் என்னைச் சுமப்பதா வேண்டாம்" என மன்றாடினான் நகுஷன். அவனிடம் அத்தனை பண்பும் பணிவும் காணப்பட்டது. ஆனால் 100 யாகம் செய்த அவனது பல்லக்கைச் சுமக்கும் பாக்கியம் தங்களுக்கு கிடைக்கவேண்டுமென ரிஷிகள் உறுதியாய் நின்றார்கள். பல்லக்கு இந்திரபுரியை நோக்கி நகர்ந்தது. தனது பாரத்தைச் சுமக்கிறார்களே என ரிஷிகளுக்காக நகுஷன் மனம் சஞ்சலப்பட்டது. "அவசரம் வேண்டாம் மெதுவாக மெதுவாக" என பல தடவைகள் கூறியவண்ணம் பண்பிலே அவன் தெய்வமாகவே மாறிவிட்டான்.

பல்லக்கு இந்திர உலகை அண்மித்தது. தொலைவில் அழகே உருவான இந்திராணியின் உருவம் மங்கலாகத் தெரிந்தது. அவள் பேரழகு அவனை ஈர்த்தது. அவளை அருகே பார்க்கும் ஆசை வெறி நகுஷனின் தலைக்கேறியது. முன்னர் மெதுவாக மெதுவாக என ரிஷிகளுக்கு கூறியவனுக்கு, இப்போது அவர்களது வேகம் எரிச்சலை மூட்டியது. "பல்லக்கு

*கஷ்டங்கள் மட்டும் இல்லையென்றால் போராடும் எண்ணமே நமக்கு இருக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் மெதுவாகப் போகின்றது!" நகுஷன் அதிர்ந்தான் குட்டையான அகத்தியர் பல்லக்கில் தொங்கிக்கொண்டிருந்தமைதான் காரணம்.

விஷயத்தைப் புரிந்துகொண்ட நகுஷன் தன் பொற் சிலம்பை உருவி "சர்ப்ப சர்ப்ப" என அகத்தியர் முதுகினில் அடித்தான். இந்திராணி மேல் கொண்ட ஆசைவெறி அந்தப் பண்பாளனை அற்பனாக்கிவிட்டது.

நிமிர்ந்தார் அகத்தியர். அகத்தியர் அகத்தியராகிவிட்டார். "சர்ப்ப சர்ப்ப என்ற நீ சர்ப்பமாகக் கடவது" என்று சாபமிட்டார் நகுஷனை நோக்கி. மனிதருள் மாமனிதனாகத் திகழ்ந்த நகுஷன், அந்த முன்னைய பண்பாளன், இப்போது மலைப்பாம்பாகி பல்லக்கிலிருந்து மண்ணுக்கு ஊர்ந்தான்.

இந்தவகையில் ஒரு பெண்ணாசை தேவைதானா?

## அழிப்பதும் காப்பதும் அதுவே

வணிகன் ஒருவன் ஏராளமான பொருள்களுடன் கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்தான். திடீரென்று அந்தக் கப்பல் புயலில் சிக்கிக் கடலில் மூழ்கியது. தப்பிப் பிழைத்த அவன் ஒரு தீவில் கரை ஏறினான். அங்கே மனிதர்கள் யாரும் இல்லை என்பதை உணர்ந்தான்.

வாழ்ந்தாக வேண்டுமே. அதற்காக மிகவும் முயன்று கடற்கரையில் குடிசை ஒன்றைப் போட்டான். தீவிற்குள் சென்று கிடைக்கின்ற காய் கனிகளை உண்டு வாழ்ந்து வந்தான். இரவு நேரத்தில் தன் குடிசையில் படுத்துத் தூங்குவான். தன் நாடு செல்ல முடியும் என்ற நம்பிக்கையே அவனுக்கு இல்லை. இப்படியே பல மாதங்கள் கழிந்தன. திடீரென்று அவன் குடிசை தீப்பிடித்து எரிந்து சாம்பல் ஆனது. உள்ளம் நொந்த அவன், "இறைவா! ஏன் எனக்கு இப்படிச் சோதனை மேல் சோதனை தருகிறாய். என் கப்பலைக் கவிழ்த்தாய். தனித் தீவில் என்னை அலையவிட்டாய். எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டேன். நான் அரும் பாடுபட்டுப் பல நாட்கள் முயற்சியில் உருவாக்கிய குடிசையையும் எரித்துவிட்டாயே. இனி நான் என்ன செய்வேன்? சாவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை" என்று அழுது புலம்பியபடி இருந்தான்.

அப்பொழுது சில மனிதர்கள் அவனை நோக்கி வருவதைக் கண்டான். மகிழ்ச்சி தாங்க முடியாத அவன் அவர்களை நோக்கி ஓடினான். "நீங்கள் யார்? எப்படி இங்கு வந்தீர்கள்?" என்று பரபரப்புடன் கேட்டான்.

வந்தவர்களில் ஒருவன், "நான் கப்பலின் தலைவன், ஆள் இல்லாத இந்தத் தீவின் வழியாக என் கப்பல் அடிக்கடி போகும். இந்த வழியாக இன்று கப்பலில் வரும்போது புகை எழக் கண்டேன். தீவில் யாரோ மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று வந்தேன். உங்களைக் கண்டேன். எங்களுடன் வாருங்கள். உங்கள் நாட்டில் சேர்க்கிறேன்" என்றான்.

"குடிசை எரிந்தது என்று வருந்தினேனே. அதனால்தான் என் மனைவி மக்களைப் பார்க்கும் வாய்ப்புக்கிடைத்தது. எல்லாம் இறைவன் அருள்" என்று மகிழ்ச்சியுடன் சொன்ன வணிகன் அவர்களுடன் சென்றான்.

*தடம் பார்த்து நடப்பவன் மனிதன். தடம் பதித்து நடப்பவன்தான் மாமனிதன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 50000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| B. சிவபாதசுந்தரம் | வல்வெட்டி | 20 தேங்காய் 1மூடை அரிசி |
| பு. ராணி | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| A. நாகேந்தினி | சித்தங்கேணி | 1000. 00 |
| திரு கணேசநாதன் | குப்பிளான் | 4000. 00 |
| த. ஸ்ரீஸ்கந்தராசா | உடுப்பிட்டி | 5000. 00 |
| A. தில்லைநடராஜா | கொழும்பு | 5000. 00 |
| நளினி வாசுதேவன் | லண்டன் | 10000. 00 |
| சஞ்சீவன் கேதீஸ்வரன் | திருநெல்வேலி | 5000. 00 |
| கந்தையா குருபரன் | வெள்ளவத்தை | 5000. 00 |
| முத்துலிங்கம் காந்திமதி | மாதகல் (கனடா) | மரக்கறி 3மூடை அரிசி |
| அரன் குடும்பம், அஜித், திவாகரன் | இடைக்காடு | 11000. 00 |
| த. கெங்கநாதன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ம. புனிதவதி | புங்குடுதீவு | 2000. 00 |
| உ. சண்முகராசா | வட்டுக்கோட்டை | 8000. 00 |
| க. விஜயகுமார் | காங்கேசந்துறை | 10000. 00 |
| க. உமாதேவி | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| பா. சாரங்கன் | வவுனியா | 2000. 00 |
| க. பாலேந்திரன் | வல்வெட்டி | 3000. 00 |
| சி. பத்மநாதன் | அரியாலை | 3000. 00 |
| பி. தர்ஷன் | வடலியடைப்பு | 5000. 00 |
| பிரபாகரன் பாலாஜி | லண்டன் | 15000. 00 |
| சி. சாம்பவி | கோண்டாவில் | 1மூடை அரிசி |
| சா. திருமூலநாதன் குடும்பம் | வேலணை-5 | 2500. 00 |
| சு. குலதீபன் குடும்பம் | வேலணை-5 | 2500. 00 |
| யோ. கரிகரன் | புலோலி | 2000. 00 |
| சி. ராதாகிருஷ்ணன் | அச்சுவேலி | 15000. 00 |

*உன்னால் சாதிக்க முடியாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| க. குகநேசன் | அச்சுவேலி | 5000. 00 |
| திரு அண்ணாமலை குடும்பம் | உடுப்பிட்டி | 1மூடை அரிசி |
| S. ராசரத்தினம் | சண்டிலிப்பாய் | 5000. 00 |
| திரு அரியநாயகம் குடும்பம் | உடுப்பிட்டி | 1000. 00 |
| திரு ஆனந்தன் | வல்லிபுரக்கோயில் | 5000. 00 |
| மு. கவிகரன் | அராலி | 25k பருப்பு, 2மூடை அரிசி 5000. 00 |
| ஆ. ஆனந்தகுமார் | அராலி | 1புட்டி அரிசி |
| சி. நாகலிங்கம் | கரணவாய் | 2000. 00 |
| சிவா பந்தல் | கரவெட்டி | 1மூடை அரிசி |
| திரு கௌசிகன் குடும்பம் | கண்டி | 2000. 00 |
| திரு சிவலோகநாதன் குடும்பம் | அச்சுவேலி | 25000. 00 |
| அஜன் திசாளினி | புத்தூர் | 15000. 00 |
| ந. ஸ்ரீஸ்கந்தராசா | காரைநகர் | 5000. 00 |
| ச. சுசிலாதேவி | புலோலி | 2000. 00 |
| அ. தவக்குமார் | உடுப்பிட்டி | 30000. 00 |
| இ. வஜீகரன் | சங்கானை | 500. 00 |
| திரு பஞ்சலிங்கம் குடும்பம் | குப்பிளான் | 15000. 00 ரூபா பெறுமதியான பொருட்கள் |
| பாபு வெதுப்பகம் | புன்னாலைக்கட்டுவன் | 2மூடை அரிசி |
| திரு மணிவண்ணன் குடும்பம் | உசன் | 1000. 00 |
| திரு பரமேஸ்வரன்பிள்ளை குடும்பம் | வட்டுக்கோட்டை | 8k பருப்பு 3 புட்டி அரிசி |
| திரு ரவீந்திரன் குடும்பம் | கொடிகாமம் | 2000. 00 |
| ப. தயாளன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திரு நல்லதம்பி குடும்பம் | பலாலி | 3000. 00 |
| திரு தர்மசேகரம் குடும்பம் | திருகோணமலை | 1000. 00 |
| திரு சதீசன் குடும்பம் | திருகோணமலை | 1000. 00 |
| திரு அப்பன் குடும்பம் | திருகோணமலை | 1000. 00 |
| க. கபில்ராஜா | காரைநகர் | 10000. 00 |
| கி. குலசேகரம் | அச்சுவேலி | 5000. 00 |
| சண்முகநாதன் வனிதா | கரணவாய் | 5000. 00 |
| சி. துளசி | கல்வியங்காடு | 5000. 00 |
| ந. சிவகுமார் | மயிலிட்டி | 22000. 00 |
| திரு பரராஜசிங்கம் குடும்பம் | அளவெட்டி | 2000. 00 |
| Dr சுரேஷ் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| திரு ஆனந்தராஜா குடும்பம் | அண்ணாசிலையடி | 5000. 00 |
| சி. இராசையா | கரவெட்டி | 500. 00 |
| சு. இமையராஜ் | குடத்தனை | 1000. 00 |
| அ. கனகம்மா | சித்தங்கேணி | 10000. 00 |
| மு. ஞானவேல் | லண்டன் | 7000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| செ. செந்தூரன் | அவுஸ்திரேலியா | 3000. 00 |
| செ. செல்வரத்தினம் | சுழிபுரம் | 2000. 00 |
| மு. குமாரவேல் | காரைநகர் | 2000. 00 |
| சி. மயூரதன் | கோகிலாக்கண்டி | 2000. 00 |
| வி. தயாநிதி | கிளிநொச்சி | 1000. 00 |
| க. சௌந்தரராஜா | கனடா | 5000. 00 |
| ஸ்ரீ விஷ்ணு துர்க்கை ஆலயம் | கொழும்பு | 500. 00 |
| திரு சுபராஜ் குடும்பம் | நீர்வேலி | 1000. 00 |
| P. ஷஷ்டிகன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| திரு ஜெயநந்தன் (மதுரா) | கனடா | 10000. 00 |
| சர்வா ஜெயம் | அச்சுவேலி | 5000. 00 |
| பொ. சிவனேஸ்வரன் | நீர்வேலி | 1000. 00 |
| கி. பதுஷன் | அராலி | 2000. 00 |
| தி. பாலேந்திரா | லண்டன் | 30000. 00 |
| S. சிவநிதி | லண்டன் | 5000. 00 |
| நா. குமாரசாமி | ஏழாலை | 1000. 00 |
| ப. ராஜேந்தினி | ஏழாலை | 500. 00 |
| சோ. முருகானந்தன் | கொழும்பு | 10000. 00 |
| பொ. உதயகுமார் | சித்தங்கேணி | உ.கிழங்கு, பருப்பு, 1மூடை அரிசி |
| திரு நமசிவாயம் குடும்பம் | உரும்பராய் | 3500. 00 |
| திரு கிருஷ்ணகுமார் குடும்பம்<br>திரு பாஸ்கரன் குடும்பம்<br>திரு நந்தகுமார் குடும்பம்<br>திரு பாலகுமார் குடும்பம் | பிரான்ஸ் | 8000. 00 |
| ப. டினேஸ் | கொக்குவில் | 1000. 00 |
| Dr R. கனகலிங்கம் | திக்கம் | 5000. 00 |
| R. ஜெயகோபி | நல்லூர் | 1000. 00 |
| ம. வசந்தகுமார் | பிரான்ஸ் | 5000. 00 |
| T. சுதாகரன் | திருநெல்வேலி | 5000. 00 |
| க. ஜெயச்சந்திரன் | நீர்வேலி | 10000. 00 |
| ச. புஷ்பராணி | கந்தரோடை | 1000. 00 |
| இ. செல்வமலர் | யாழ்ப்பாணம் | 1500. 00 |
| திரு சிவபாலன் குடும்பம் | கொழும்பு | 500. 00 |
| சி. அசிதன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| சி. சிவராசா | சுன்னாகம் | 1500. 00 |
| த. கஜீபன் | லண்டன் | 20 பவுன்ஸ் |
| திரு சிவசித்தன் குடும்பம் | கந்தரோடை | 2000. 00 |
| R. அஸ்வந் | காரைநகர் | 5000. 00 |
| ம. நந்தகுமார் | ஊரிக்காடு | 5000. 00 |

***பொறுமை உள்ள மனிதன் நிச்சயம் வாழ்க்கையில் வெற்றி பெறுவான்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஆ. பாக்கியம் | புத்தூர் | 2000. 00 |
| சி. தவலிங்கம் (இலங்கை வங்கி) | பருத்தித்துறை | 10000. 00 |
| த. பாமா (N.S.B) | நெல்லியடி | 5000. 00 |
| செ. செல்வகுமார் | கொடிகாமம் | 5000. 00 |
| பா. மயூரகாந்தன் | வவுனியா | 1000. 00 |
| நிலா ரான்ஸ்போட் | அளவெட்டி | 4000. 00 |
| த. சேயானந்தன் குடும்பம் | உடுவில் | 500. 00 |
| K. சிவானந்தராஜா கலைவாணி | கரவெட்டி | 5000. 00 |
| K. தியாகராஜா | யாழ்ப்பாணம் | 15000. 00 |
| ரா. கனகம்மா | கொடிகாமம் | 9000. 00 |
| திரு விநாயகசுவாமி | கொக்குவில் | 2000. 00 |
| திரு சூரியகுமார் | திருகோணமலை | 1000. 00 |
| த. உதயகுமார் | சுன்னாகம் | 10000. 00 |
| திருமதி தம்பிராசா | திருநெல்வேலி | 1மூடை அரிசி |
| பூ. ஜெயராஜா | நல்லூர் | 1000. 00 |
| வை. வரதராஜா | குப்பிளான் | 5000. 00 |
| தெ. விநாயகநாதன் | பருத்தித்துறை | 1000. 00 |
| அ. வைகுந்தன் | நாகர்கோவில் | 15000. 00 |
| க. சண்முகவடிவேல் | காரைநகர் | 500. 00 |
| உ. கருணகுமார் | தெல்லிப்பழை | 10000. 00 |
| S. லோகேஸ்வரன் | தாவடி | 1000. 00 |
| திரு பாலசுப்பிரமணியம் குடும்பம் | கனடா | 5000. 00 |
| அருள்கலா அருளம்பலம் | சுன்னாகம் | 5000. 00 |
| இ. சுதாகரன் | கரந்தன் | 1மூடை அரிசி |
| இ. யோகேஸ்வரி | மானிப்பாய் | 6000. 00 |
| சு. துவாரகன் | உடுப்பிட்டி | 5000. 00 |
| வி. அருணாசலம் | உடுப்பிட்டி | 2000. 00 |
| வா. மனோராணி | லண்டன் | 20000. 00 |
| ம. ராகுல் | யாழ்ப்பாணம் | தூள், 2புட்டி அரிசி |
| திரு கிருஸ்ணலிங்கம் | லண்டன் | 3000. 00 |
| கு. வருண் | இருபாலை | 1000. 00 |
| ச. அனந்தினி | கொழும்பு | 5000. 00 |
| நா. விமல் | ஜேர்மன் | 2000. 00 |
| ந. விஸ்வநாதன் | இருபாலை | 1000. 00 |
| ம. மகேந்திரராசா | மல்லாகம் | 1000. 00 |
| த. செல்வசோதி மூலம் க.செ. நடராசா, க.செ. இராசரத்தினம், க.செ. பாலச்சந்திரன் | யாந்திரன் தோட்டம் கரவெட்டி | 10000. 00 |

(தொடரும்...

திட்டங்களில் வெற்றி என்பது இல்லை. திட்டமிடல் என்பதிலே வெற்றி தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறவாத புகழுடைய திருவாசகம்

– திரு முருகவே பரமநாதன் அவர்கள் –

காலத்தையும் கடந்து நிற்கும் பக்திப்பனுவல் திருவாசகம். படிப்போரையும் உயர்த்தி தானும் உயர்ந்து படிப்போரைத் தன்பால் ஈர்க்கும் தமிழால் இயன்றது. நாம் நெடுந்தூரம் பயணிக்கத் தொடர் வண்டிகளிலும் வான ஊர்திகளிலும் செல்கிறோம். இப்பிரயாணத்திற் சிலர் அறிமுகம் ஆவார். வாகனத்தைவிட்டு இறங்கியதும் அவ்வளவுதான். யாத்திரை மேற் கொள்கையிற் சில போலிகளையும், அசல்களையும் சந்திக்கிறோம். சுற்றுலாவாக, உல்லாசப் பயணமாக, விடுமுறைப் பிரயாண மாத வசதி வாய்ப்புள்ளோர் சென்று மகிழ்வர். இப் பிரயாணங்களிற் சிலர் எம் நெஞ்சோடு உறவாடுவர். நீடிக்காது. இவற்றையும் கடந்து சிந்தனை யாளர்கள், அறிவு சான்றோர், பேராசிரியர்கள், புலவர்கள், கவிஞர்கள், எழுத்தாளர், சிற்பிகள், ஓவியர், பாடகர் என்று பலருடன் செய்த பிரயாணங்கள் சுவை நிரம்பியதாய் நெஞ்சைவிட்டு நீங்காத அனுபவங்களாய் அமையும். இவற்றையெல்லாம் கடந்து தேவாரம், திருவாசகம், நாலாயிரம் என்று திவ்விய பக்திப் பனுவல்களை ஆர அமர இருந்து படிக்கும்போது நாம் அவர்களுடனேயே பிரயாணஞ் செய்வது போன்ற மேலான அனுபவம் நம் வாழ்நாள் உள்ள வரை எம்மை ஆட்கொண்டுவிடும். இத் தோரணையில் மாணிக்கவாசகர், அப்பர், சம்பந்தர், சுந்தரரில் இருந்து வள்ளலார் வரையுள்ள அருளாளர்களின் பக்திப்பனுவல்களும், பாடியோரும், எம் நெஞ்சில் நிறைந்திருப்பர். காலமெல்லாம் எம்மோடு அவர்கள் உடன் இருப்பது மாதிரியேதான். அவர்களுடன் நாமுமே உடன் செல்லுகிறோம். ஏன் அவ்வளவு மன ஈர்ப்பு. படைப்பின் விலாசம், ஆழம் அகலம் எல்லாமே எம்மை முற்றுமுழுக்க மாற்றி, புதிய உலகில் எம்மை நடமாட வைக்கின்றன. அப்பாமாலைகளின் சில கவிதைகள் எம்மைச் சுற்றி சுழன்று ரீங்காரம் இடுகின்றன. இப் பார்வையிற் திருவாசகம் தமிழ் நாட்டையும் தாண்டி சைவ சமயத்தையும் விடுத்துப் பிற சமயத்தவர்களாலும் பிறமொழியாளர்களாலும் பெரிதும் போற்றப்படுகிறது. காரணம் என்ன என்பதை அதில் ஆழங்காற்பட்டவர்களேயறிவர். ஊனினை உருக்கி உள்ளொளி பரப்பி உலப்பிலா ஆனந்தம் தந்து எம்மை அரவணைத்து, ஆன்மீக நெறியுட்படுத்தி ஒரு புனிதமான வாழ்வை எம்மையறியாமலே தந்து விடுகிறது. இறவாத புகழுடைய நூல்கள் தமிழ் மொழியில் இயற்ற வேண்டும். திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கஞ் செய்ய வேண்டும் எனப் பாரதி பாடினானே. அதற்கு இலக்கியமாய்த் திகழ்வது திருவாசகம் ஒன்றேயாம்.

நம் மண்ணிலே விப்ரர்கள் சிவபூசை செய்பவர்கள். இவர்களைப் போன்று சைவப் பெருங்குடி மக்கள் பலர் சிவபூஜா துரந்தரர்களாக வாழ்ந்தனர். இன்னும் வாழ்கின்றனர். நம் வாழ்நாளில் கண்ட கொக்குவில் குமாரசுவாமிப் புலவர், சைவப்பெரியார் சிவபாத சுந்தரனார் போகும் இடங்கட்கெல்லாம் பூசைக்கான தட்டுக்கள், பூசைப்பெட்டியைச் சுமந்து செல்வர். இஃதே போன்று இன்னோர் சிவபூஜை நடந்தது என்பதைப் பலர் அறிவர். திருவாசகத்தையே

*வெற்றி எனும் உயரத்தை அடைய ஏணியாக இருக்கும் ஆயுதம்தான் தன்னம்பிக்கை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவலிங்கமாகப் பாவித்து சிவபூசை செய்யும் வழக்கம் தமிழகத்திலே இருந்தது. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தாபித்த தேவாரப் பாடசாலை ஒன்று காஞ்சி ஏகாம்பர சுவாமிநாதர் சுவாமி கோயில் வாயிலில் அமைந்திருக்கிறது. அண்ணாமலைச் செட்டியார் அங்கே தங்குவது வழக்கம். அப்போ சிவபூஜை செய்தே ஆலய தரிசனம் செய்வார். சிவலிங்கத்தையோ வேறு திருவடிவங்களையோ வைத்துப் பூசை செய்வதில்லை. திருவாசகச் செழுமறையைச் சிவலிங்க மாகப் பாவித்தே சிவபூசை செய்வார் அந்த மகான். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நித்திய கருமவிதியென்றோர் கைநூலை எழுதி வெளியிட்டார். அஃதேபோல திருவாசக சிவபூசை விதி என்றோர் நூலையும் வெளியிடத் தவறவில்லை. இதில் இருந்து திருவாசகச் சிவபூசை எவ்வளவு முக்கியத்துவம் வகிக்கிறது சைவ மக்கள் மத்தியில் என்பது வெள்ளிடைமலையாம். ஆலயங்களிலே ஓதப்படும் பஞ்சபுராணங்களிற் திருவாசகம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. அம்மட்டோடு நில்லாது மார்கழி மாதத்தில் ஆலயங்களிற் திருவாசகம் ஒன்றையே ஓதும் பெருவழக்கும் உண்டு. மார்கழித் திருவெம்பாவை நோன்பை மகளிர் மேற்கொள்வதும், திருவாதிரையில் நடைபெறும் ஆருத்திரா தரிசனமும் சைவ மகாசனங்கள் மத்தியில் முக்கிய இடம்பெறக் காணலாம். இளம்பராய மகளிர் மார்கழி நீராடி, ஆற்றோரங்களிலோ, குளக்கரை களிலோ மணலால் பாவை வடிவங்களை அமைத்துப் பூஜை மேற்கொண்டு விரதம் அனுட்டிப்பர். நல்ல கணவனை வேண்டியும், நாடு செழிக்கவும், நல் அரசாட்சி நாட்டில் நிகழவும் இந்நோன்பு மேற்கொள்ளப்படும். சைவ சமயிகள் மட்டுமன்றி வைணவப் பெண்களும் இந்நோன்பை அனுட்டிப்பர். மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளாமெனத் திருவெம்பாவையை (திருவாசகம்) ஆலயங்களில் மட்டுமன்றி வீடுகளிலும் பட்டிதொட்டிகளிலும் கூட்டாக ஓதுவர். மணிமொழியார் திருவெம்பாவையைப் பாடியது போன்று ஆண்டாளும் திருப்பாவையை அருளிச் செய்தாள். இப் பாசுரங்களை மார்கழித் திங்கள் ஒவ்வொரு நாளும் வைணவர்கள் பாராயணஞ் செய்வர். இதில் இருந்து திருவாசகத்தின் மகிமை விளங்குகிறது. பர்மா, சீயம் போன்ற தூர கிழக்கு நாடுகளிலும் திருவெம்பாவை சாதிக்கின்ற வழக்கம் இன்றும் உள்ளது. எனின் திருவாசகச் செல்வாக்கு பரதகண்டத்தையும் கடந்து பாவனையில் இருக்கிறது எனின் திருவாசகத்தின் மதிப்பு எவ்வளவு மேன்மையானது. அதிகாலையில் நடக்கும் திரு அநந்தற் பூசையில் மாணிக்கவாசகரின் திருப்பள்ளி எழுச்சி பாடுவதும், மகோற்சவங்களின் இறுதி நாளான தீர்த்தத் திருவிழாவிற் பொற்சுண்ணம் பாடி மஞ்சன நீர் ஆட்டுவதும் தொன்றுதொட்டே நடைபெறுகிறது. வல்லிபுரத்தில் அமைந்த ஆழ்வார் சுவாமி ஆலயத்திற் பஞ்சபுராணம் ஓதுவதும், திருமஞ்சன நீருக்கான பொடியைத் தயார்பண்ண இன்றும் (மஞ்சன நீராட்ட) திருப்பொற்சுண்ணம் இடிக்கப்படும். இதில் இருந்தே திருவாசகத்தின் மகிமையைச் சொல்வதற்கு மொழியில்லை. இந்த மரபு மலேசியா, சிங்கப்பூரிலும் நடைமுறையில் உண்டு. எண்பதுகளின் பின்பு புலம் பெயர்ந்து மேலைத் தேசங்களிலும், அவுஸ்திரேலியா, கனடாவிற் குடியேறிய மக்கள் எடுத்த ஆலயந்தோறும் திருவெம்பாவை ஓதப்படுவது வெளிப்படையாம். இன்னும் திருவாசகமுற்றோதல் கனடாவிற் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு திருவாசக விழாவும் எடுக்கின்றனர். இப்புனித திருவாசகத்தை நாக்கூசாது முதியோர் சிலரும், இளையோர் சிலரும் (தேவார திருவாசகத்தைச்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்தவீட்டுப் பாட்டென்று கூறுவது சிவத்துரோகமாம். சிவ நிந்தனை செய்வோர் இறைவன் எழுதும் கீழ்க்கணக்கில் இடம்பெற்று மீளா நரகத்தை எய்துவர் அன்றோ. மிகப் பழைய காலத்தில் காளாமுகர், பாசுவதர், சமணர் தமிழ்த் தேசத்திற் புகுந்து தம் சமயத்தைப் பரப்ப முயன்றதுபோல வடக்கத்தையவர்கள் சிலரின் படையெடுப்பு இன்று ஈழமண்ணிலும் புலம் பெயர்ந்த பிரதேசங்களிலும் புகுந்து சைவத்தைப் பெலவீனப்படுத்துவது உள்ளங்கை நெல்லிக்கனியாம். விப்ரர்களும் இதற்கு அனுசரணையே. இம்மட்டோடு அய்யப்ப, ஆஞ்சநேயர் வணக்கமும் கிறீத்தவ கொண்டாட்டங்களுடனும் சைவாலயங்களிற் புகுத்தப்பட்டமை மடி நிரப்பு கைங்கரியமாம். எனவே எம் சைவ சமயத்தைப் பேணிப் புரக்க சேரவாரும் ஜெகத்தீரே.

---

## வாசகர் உள்ளத்திலிருந்து....

கந்தனின் இணையற்ற கீர்த்தி ஒன்றுதான் கலியுகத்தில் வரும் பாவங்களைப் போக்கவல்லது. கலியுகத்தின் வெப்பத்தைத் தணிக்கும் கற்பகநிழல் கந்தவேளின் கருணைதான். அந்தக் கருணைக் கந்தன்தான் பூவரசமரத்தைத் தலவிருட்சமாகக் கொண்ட ஆதிபரம்பொருள் சரவணபவ என்று சொல்லும் செல்வச்சந்நிதியான். இந்த கந்தன்தான் தொண்டைமானாற்றங்கரையில் அமர்ந்திருந்து தவத்திரு மோகனதாஸ் சுவாமிகள் பல வழிகளிலும் சேவை செய்ய அருள்புரிகிறார். இது அவர் செய்த தவப்பயனே! அவர் பணியை வேறு எவரும் செய்யமுடியுமா?

அவர் செய்யும் அன்னதானப்பணி, அங்கு வரும் அடியவர்களுக்கு அன்னம் இல்லை என்று சொல்லாமல் அன்னம் கொடுத்து வயிற்றையும் நிறைத்து மனநிறைவுடனும் செல்லச் செய்கிறார்கள். மாணவர் நலன் பணியின்கீழ் பல பல ஏழை மாணவர்களின் பாடசாலைக் கல்விக்கு தேவையான கற்றல் உபகரணங்களை மாதம்தோறும் வழங்கி அவர்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும் அதேவேளை பல்கலைக்கழகத்தில் கற்கும் ஏழை மாணவர்களுக்கும் மாதம்தோறும் உதவிப்பணம் வழங்கி வருகின்றனர். அறிவுப்பணி, போட்டிப்பணி, ஊக்கப்பணி, யாத்திரைப்பணி என உதவிகளை வழங்கும் அதேசமயம் முதியவர்களுக்கு காலை, மதியம், இரவு என 03 வேளைகளும் தேநீர், சிற்றுண்டிகள், உணவு என்பன கொடுத்து அவர்களை அன்போடு ஆதரித்து வருகிறார். அவர் உள்ளம் அவரை அன்போடு ஆசீர்வதித்து வருகிறது என்றால் மிகையாகாது.

அறியாமை எனும் அக இருளை போக்கவல்ல பல்வேறு ஆன்மிக ஆக்கங்கள், கட்டுரைகள், கவிதைகள் என்பவற்றைத் தாங்கி 303ஆவது மலராக ஞானச்சுடர் மலர்வது வியத்தகு விடயமாகும். மாதம் தவறாது வெளிவந்துகொண்டிருந்த மலர் கொரோனா நோய்த்தொற்று காரணமாக வெளியாகுவதில் கால தாமதம் ஏற்பட்டாலும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பது போற்றத்தக்க விடயமாகும். தனக்கென்று வாழ்பவன் சிறியவன். ஆனால் பிறர்க்கென்று வாழ்பவன் பெரியவன். மோகனதாஸ் சுவாமிகள் மக்களைப் பக்தி மார்க்கத்தில் வழிநடாத்தி, தர்ம வாழ்க்கையில் ஈடுபடுத்திச் செல்லும் தொண்டினை நாங்கள் யாவரும் அறிவோம். நாயன்மார்கள் அன்று செய்த அதே தொண்டினைத்தான் மோகனதாஸ் சுவாமிகள் இன்று செய்து வருகிறார்.

அத்தோடு ஞானச்சுடர் மலரை சிறப்புற வெளியீடு செய்கின்ற சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவைக்கும் எனது நன்றிகளும், பாராட்டுக்களும் ஆனி, ஆடி மாத புத்தகம் எனக்கு ஆரம்பத்தில் கிடைக்கப்பெறவில்லை. மற்றவர்கள் கிடைக்கும் கிடைக்கும் என சொன்னார்கள். ஆனால் எனக்குக் கவலை நான் கடிதம் எழுதினேன். உடனே புத்தகம் ஒன்றை அனுப்பினார்கள். இதில் இருந்து அவர்களது சேவை மனப்பாங்கு புலப்படுகிறது. இதற்காக அவர்களுக்கு நான் மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றேன். மேன்மேலும் ஞானச்சுடர் ஒளிரவேண்டும் என சந்நிதியானை வேண்டி நிற்கின்றேன்.

-பொ. திலகவதி-

*சரியான பாதையைத் தேர்ந்தெடுத்தால்தான் வாழ்க்கையில் வெற்றியடைய முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓங்கார நாடி என்னும் சுழுமுனை

(தொடர்ச்சி...

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

சுழுமுனை யோகத்தின் முதற்படி சந்திர யோகமாகும். சந்திரனை உடம்பில் விளங்கச் செய்யும் யோகம் சந்திரயோகமாகும். சித்தர்களின் யோக நிலைக் கருத்துப்படி முதுகுத் தண்டில் இரண்டு நரம்புச்சட்டங்கள் உண்டு. இவையே நமது இடகலை, பிங்கலை என்பன. மேலே பீனியல் சுரப்பிக்கும், கீழேயுள்ள மூலாதாரம் வரையுள்ள பகுதியில் ஒரு துளை பொருந்திய நாண் உடன் செல்கிறது. இதையே சித்தர்கள் சுழுமுனை நாடி என்று கூறியுள்ளனர். குண்டலினி சக்தி விழித்து எழும்போது அது சுழுமுனை வழியாக மேல் எழுந்து செல்ல முயல்கிறது. யோகப் பயிற்சியினால் குண்டலினி மேலே எழும்போது, படிப்படியாக மனத்திலுள்ள திரைகள் விலகுகின்றன. அந்நிரையில்தான் யோகிக்குப் பல தெய்வீகக் காட்சிகளும், அற்புதம் மிக்க ஆற்றல்களும் வந்து சேர்கின்றன. குண்டலினி சக்தி சுழுமுனையில் நுழைந்ததும் யோகிக்குத் தெரியும் காட்சிகள் எல்லாம் தலைக்குமேல் உள்ள சிதாகாசத்தில் தோன்றும் குண்டலினி சக்தி மூளையை அடைந்ததும் உருவமற்ற பிரகாசமான காட்சி சிதாகாசத்தில் தோன்றும். இதையே "நாதாந்தம்" என அழைக்கின்றனர். சுழுமுனை நாடியில் குண்டலினி சக்தி செயற்படும்போது அது சகஸ்ரதளத்தை நோக்கி முன்னேறத் தொடங்கும். அப்பொழுது நரம்புமண்டலப் பின்னல்கள் அதற்குத் தடையாக இருக்கும். இப் பின்னல்களை அறுத்துக் கொண்டுதான் சக்தி மேல்நோக்கிச் செல்லும். இப்பின்னல்கள் அறுபட்டால் நரம்புமண்டலங்களுக்கு வேலை இருக்காது. நரம்புகள் இல்லாமலே சக்தி மேல் செல்லும். பின்னல்கள் நமக்குள்ள மனோசக்திகளேயாம். இந்நிலையில் யோகிக்கு எல்லா அறிவும் கிடைக்கும். அப்போது உடல் பற்றுக்கள் இல்லாது போய்விடும். அதனால்த்தான் யோகிகள் சுழுமுனைமீது ஆதிக்கம் செலுத்துகிறார்கள். உடம்பின் இயங்கும் சக்தியை எவ்வித நரம்பின் இயங்கும் சக்தியின்றி சுழுமுனையில் செலுத்தினால் சகல பிரச்சினைகளுக்கும் நாம் விடை காண முடியும் எனவும், ஆறாதாரங்களின் ஒவ்வொரு நிலைகளில் செய்யும் சாதனைகளிலும் இவ்விதம் அபூர்வ சக்தி நிலைகளை உண்டாக்கிக்கொள்ளலாம் என்றும் சித்தர்கள் கூறியுள்ளனர்.

எல்லா மனிதர்களுக்கும் இச் சுழுமுனை அமைந்துள்ளது. அவர்களின் சுழுமுனையின் மேல் கீழ் பகுதிகள் மூடியே உள்ளன. இவ்வாறு மூடியிருப்பதனால் அவர்களின் சுழுமுனைக் குழாய்வழி எவ்வித செயற்பாடுகளும் நடைபெறுவதில்லை. தொடர்ந்த பயிற்சியின் மூலமே இச் சுழுமுனைக் குழாயினைத் திறந்துகொள்ள வேண்டும். நரம்புகளின் உணர்ச்சியோட்டம் இச் சுழுமுனைக் குழாய் வழியே செல்ல வேண்டும் என்பது யோகிகளின் தத்துவக் கருத்தாகும். உணர்ச்சிகளின் உந்து சக்திகள் மூலாதாரத்தில்தான் நிலைக்களமாகச் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. இந்த உணர்ச்சிகளின் சேமிப்புத் தொகுதிதான் குண்டலினி சக்திப் பாம்பு. இது பாம்புபோல் சுருண்டு படுத்திருக்கும். எமது மனத்தை அடக்கிச் செயற்படும் ஆன்மாவின் சக்தியும் மூலாதாரத்தில்தான் சேமித்து வைக்கப்படுகின்றது. நாம் நீண்ட நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை செய்தால் அல்லது ஆராய்ச்சி செய்தால் நமது மூலாதாரப் பகுதி வெப்பமடைவதை உணரலாம். சுழுமுனை வழி செல்லும் குண்டலினி சக்திக்குப் பல எதிரியக்கங்கள் உண்டாகின்றன. எல்லா உணர்ச்சிகளுக்கும் தலைமை நிலையம் மூளையாகும். குண்டலினி சக்தி மூளையை அடையும்போதுதான் யோகி ஆன்ம தரிசனம் பெறுகின்றான். ஞானஒளி கிடைக்கின்றது. இது புலன் கடந்த காட்சியாகும். அப்போது மூளையின் செயல்கள் முற்றிலும் மாறுபட்டுக் காணப்படும். எல்லா அறிவும் ஆற்றலும் அவர்களுக்குக் கிட்டுகின்றது. இந்நிலையில் பிண்டங்களுக்கு உணர்ச்சியாகவும், அண்டங்களுக்குச் செயலாகவும் அமைந்துள்ளதன் காரணம் யோகிக்குத் தெளிவாகின்றது.

உடலியக்கம், மன இயக்கம் இரண்டிற்கும் காரணம் மூலாதாரமே. உடலின் அனைத்திற்கும் மூலாதாரமே காரணம். சுழுமுனைப் பாதையின் மூடிய வாயில் மூலாதாரத்தில் தான் உண்டு. அதுவே யோகத்தின் முதல் வாயிலாகும். சுழுமுனையின் பெருமைபற்றி திருவள்ளுவர் தனது ஞானவெட்டியான் பாடலில் பின்வருமாறு கூறியுள்ளார்.

“விந்து நாதத் தொனியந்தம் பொருந்திய”

சுழுமுனை நான்கு பிரிவுகளுடையது. முதலாவது பிரிவு; முள்ளந்தண்டு உள்வழிக் குழாய், இரண்டாவது தலையுள் இரு பிரிவுகளாகப் பிரியுமிடம். மூன்றாவது பிடரிப்பக்க சுழுமுனை. நான்காவது நெற்றிக்கண் சுழுமுனை. சுழுமுனையின் மூலாதார வாயிலைத் திறந்துவிட்டால் மேலை வாயில் தானாகவே திறந்துகொள்ளும் என்பதை திருமூலர் பின்வரும் திருமந்திரத்தில் விளக்கியுள்ளார்.

கடைவாசலைக் கட்டிக் காலை எழுப்பி
இடைவாசல் நோக்கி இனிதுஉள் இருத்தி
மடைவாயில் கொக்குப்போல் வந்தித்திருப்பார்க்கு
உடையாமல் ஊழி இருக்கலும் ஆமே.

-திருமந்திரம்.

மூலாதாரத்தை அடைத்து அங்குள்ள காமவாயு அல்லது அபானனை மேலே செல்லும் படி செய்து இடைவாயிலான சுழுமுனையில் பொருந்தவைத்து, மடைவாயில் கொக்குப்போல் மீனுக்குக் காத்திராமல், நாட்டத்தை விடாமல் இருப்போர்கள் தம் தேகம் சிதையாமல் ஊழிக்காலம்வரை இருக்கலாம் என இத்திருமந்திரம் குறிப்பிடுகின்றது.

மேலை நிலத்தினாள் வேதகப் பெண்பிள்ளை
மூல நிலத்தில் எழுகின்ற மூர்த்தியை
ஏல எழுப்பி இவளுடன் சந்திக்கப்
பாலனும் ஆவான் பார்நந்தி ஆணையே.

-திருமந்திரம்.

மேலுள்ள திருமந்திரத்தினால் விளக்கப்படுவது, ஆறு நிலைகளுக்கும் அப்பாற்பட்ட அருள்வெளிக்கு உரியவனாகிய உமை சக்தியை இங்கு மேலை நிலத்தினாள் எனக் குறித்துள்ளார். இவ் வெளியில் காணத்தக்கது, பற்று அற்ற நிலை. அதாவது பக்கச்சார்பற்ற

*வெறும் அதிர்ஷ்டத்தை மட்டும் தேடிச் செல்லும்போதுதான் நாம் கால்கள் இடறி விழுகின்றோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை. இதுவே நிராதாரம் எனக் கூறப்பட்டுள்ளது. நிராதார யோகம் என்னும் பகுதியில் திருமந்திரம் மூன்றாம் தந்திரத்தில் இறுதியாகவுள்ள நான்கு அதிகாரங்களிலும் இந் நிராதார யோகம் பற்றி திருமூலர் விளக்கியுள்ளமை காணலாம். அதில் வரும் கேசரியோகம், பரியங்க யோகம், அமுரிதாரணை, சந்திரயோகம் ஆகிய நான்கு அதிகாரங்களும் யோகியை நிராதார நிலைக்கு அழைத்துச் செல்வன. நிராதாரத்தில் வீற்றிருப்பவள் மெய்யுணர்வுச் செல்வியாகிய உமாதேவியார். மூலாதாரத்தில் உள்ள திருவருள் சிவபெருமான் ஆவார். இந்த திருவருளை மேல் எழுப்பி மேலுள்ள நிராதாரத்தில் உள்ள மெய்யுணர்வுச் செல்வியுடன் கூடச் செய்தலே யோகமாகும். வேதகப் பெண்பிள்ளை என்பதில் வேறுபாட்டினைச் செய்தல் என்பதும் கருத்தாக லாம். பிரமரந்திரத்தில் உறையும் சிற்சத்தி உடலை மாற்றி அமைப்பவள். மூலாதாரத்தில் உறையும் சிவசக்தியை சுழுமுனை வழிமேல் எழுப்பி உச்சியாகிய சிரசின்மேல் உறையும் உமை சக்தியுடன் சேர்ப்பித்தால், வயதில் முதிர்ந்தவனும் இளவயதினர் ஆகலாம் என்று இம் மந்திரத்தில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. சில சித்தர்கள் மேல் உள்ள இறை சக்தியை சிவனாகவும், கீழ் உள்ள மூலாதார சக்தியை உமை சக்தியாகவும் உருவகிப்பதும் உண்டு. சில சித்தர்கள் இவை இரண்டையும் சமபலம் உள்ள சக்திகளாகவும் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் இவற்றில் ஒன்றிற்கொன்று உயர்வோ தாழ்வோ இல்லை. இது அவரவர் வழிபடும் பாரம்பரியத்தைப் பொறுத்தது. இரு சக்திகளும் இரு துருவங்களாகப் பிரிந்து அமைந்துள்ளமை என்பது சித்தர்களின் முடிவாகும். இச் சக்திகள் இரண்டையும் இணைப்பதே சுழுமுனைச் சூத்திரமாகும். யோக சாதனையில் வீணாந் தண்டினுள் சுக்கிலம் புகும் வழியைக் "கள்ள வாயில்" என சித்தர்கள் குறிப்பிடுவர். இவ்வாயில் வழி வரும் செயலானது சித்தர்கள், யோகி களின் தவத்தினை அழிக்கும் வழியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் வழியை "இடைவாயில்" எனவும் குறித்துள்ளனர். பெரும்பாலான சித்தர்கள் காமவாயிலை அடைத்து அதாவது அபான வாயுவை மேல்நோக்கி திருப்பி பிராணவாயுவுடன் ஒன்றிணைந்து இரண்டுமே மேல்நோக்கி வலுவுடன் சுழுமுனை வழிசென்று அதனால் தானாகத் திறந்த மேலை வாயில் வழியாக பிரமரந்திரத்தை அடையும் வழி ஒன்று மட்டுமே கூறியுள்ளனர். பின் வந்த வள்ளலார் இராம லிங்க அடிகள் இவ்விடயத்தில் ஒரு குறுக்குவழிமூலம் பிராணன் பிரமரந்திரத்தை அடையும் வழிமுறையைக் கூறியுள்ளார். இது நெற்றியிலிருந்து நேரே பிரமரந்திரத்தையடையும் வழியாகும். இதற்குக் கீழ் வாயில் அதாவது மூலாதார வாயில் திறபடத்தேவையில்லை. குண்டலினி சக்தியானது மூலாதாரத்திலிருந்து கிளம்பாமல் இடையே நெற்றியிலிருந்து நேரே பிரமரந்திரத்தை அடையும் குறுக்குவழி இதுவாகும். வள்ளலார் காட்டிய யோக வழி இலகுவான வழியாகக் கூறுவர். சித்தர்கள் காட்டும் வழி கடின யோக வழி எனப்படுகிறது. இவை இரண்டினுக்கும் வித்தியாசமான முறைகள் நடைமுறைப்படுத்தப்படும்.

புறப்பொருள் நாட்டமில்லாது அகப்பொருள் நாட்டம் கொள்ளும்போது, இடகலையும் பிங்கலையும் செயலற்ற நிலைக்கு வருகின்றது. அதன்பின் செபிக்கமுடியாத "அசபா" எழுத்தாகிய "ம்" நாதமாகச் செயற்பட்டு சுழுமுனை வாசல் திறக்கப்படுகின்றது. மகேஸ்வர வடிவம் விந்து, சதாசிவ வடிவம் நாதம் ஆகும். படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய

*செய்யத் தெரிந்தவன் சாதிக்கிறான். செய்ய முடியாதவன் போதிக்கிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று நிலைகளும் கெட்டநிலையே. அதுவே மகேஸ்வர வடிவம் ஆகும். என்றும் சிவமாக இருக்கும் வடிவம் சதாசிவ வடிவமாகும்.

ஔவையாரின் விநாயகர் அகவல்படி, கணபதியே மூலாதாரக் கடவுள் என்கின்றது. மூலாதாரத்தில் கணபதியே குண்டலினி சக்தியாக இருப்பதாகவும் அது கூறுகிறது. எனவே, உள் முகத்தில் கணபதியைத் தரிசித்து (சூக்கும விந்து நாதம்) உணர்ந்தால் சுழுமுனையானது தானாகத் திறந்துகொள்ளும் என்றும் விநாயகர் அகவல் கூறியுள்ளது.

ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்...

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத் தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி

மூலாதாரத்து மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே

தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரை கழல் சரணே.

-விநாயகர் அகவல், ஔவையார்.

சுழுமுனை நாடியானது, உடலின் அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம் ஆகிய மூன்றினையும் தொட்டு நிற்கும் நாடியாகும். இம் மூன்று மண்டலங்களுக்கும் ஓர் முக்கிய தூண்போல் சுழுமுனை விளங்குகின்றது. மூன்று மண்டலங்களில் உள்ள மூன்று முடிச்சுக்களும் அவிழ்படல் வேண்டும். அப்போதுதான் சுழுமுனை திறக்கும். ஐம்புல அடக்கம் வேண்டுமெனில் சுழுமுனை திறபடல் வேண்டும். ஆறாதாரங்களில் இம் மூன்று முடிச்சுக்களும் உள்ளன. இம் முடிச்சுக்கள் அவிழ்ந்தால் சுழுமுனைப் பாதை நேர் கோடாக அமையும். பிரமரந்திரத்தில் இயங்கும் ஆன்மா விந்துவாகவும், இறைவர் நாதமாகவும் பொருந்தி நிற்கும். இந்த நிலையையே “கதவு திறத்தல்” என இராமலிங்க அடிகளும் குறிப்பிட்டுள்ளார். சுழுமுனை திறக்கப்பட்டால் பசி, தாகம், உறக்கம், நரை, திரை, பிணி, மூப்பு, சாக்காடு என்று பல விசாரங்களையுடைய இவ்வுடம்பினை, ஒளி உடம்பாக்க முடியும் என்றுள்ளார் சிவவாக்கியர். அவர் பாடல் வருமாறு.

மூலநாடி தம்முளே முளைத் தெழுந்த வாயுவை
நாளு நாளு மும்முளே நடுவிடுத்த வல்லிரேல்
பாலனாகு மும்முடல் பறந்து போக வாய்விடும்
ஆலமுண்ட கண்டர்பாத மம்மைபாத முண்மையே.

-சிவவாக்கியர் பாடல் 479.

*பலவற்றைக் கேளுங்கள். ஒருசிலவற்றை மட்டும் பேசுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைப் பேராற்றல் உடைய மனிதர்களாய் நாம் மாற வேண்டும். நம் உடம்பினுள் இறைவன் உள்ளான்.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.

-திருமந்திரம். (தொடரும்...

## பற்றுக்களை விட முடியுமா?

கைலாயத்தில் சிவபெருமான் வீற்றிருந்தார். அருகே உமாதேவியாரும் இருந்தார். அவர்கள் இருவரையும் தேவர்கள், முனிவர்கள், அடியார்கள் அனைவரும் கூட்டமாக வழிபட்டபடி இருந்தார்கள். சிவபெருமானைப் பார்த்து உமாதேவியார், "சுவாமி! எனக்கு ஓர் ஐயம். பொருள் எது? சக்தி எது? விளக்கமாகச் சொல்லுங்கள்" என்று கேட்டாள்.

"உமையே! நான் பொருள். பொருளின் சக்தி நீ. ஆகவே நம் இருவர்க்கும் எந்த வேற்றுமையும் இல்லை" என்றார் சிவபெருமான். "சுவாமி இந்த இரண்டில் எது உயர்ந்தது? சொல்லுங்கள்" என்று கேட்டாள் உமை.

சிவபெருமான் பதில் சொல்வதற்கு முன் "உயர்ந்தது பொருள்தான். ஏனென்றால் சக்தி பொருளின் வயப்பட்டது. பொருள் இல்லாமல் சக்தி இல்லை. ஆனால் சக்தி இல்லாமலும் பொருள் உண்டு" என்று பெருமிதத்துடன் ஒரு குரல் கேட்டது.

எரிச்சல் அடைந்த உமை, "நீங்கள் சொல்வதற்குமுன் யார் அவன் குறுக்கே பேசுவது?" என்று கேட்டாள்.

அப்போது சைகீசவ்யர் என்ற முனிவர் அங்கிருந்து கிளம்பிச் சென்றார்.

"உமையே அப்படிப் பேசியவர் சிறந்த முனிவராகிய சைகீசவ்யர். என் அன்பர். நீ கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டுச் செல்கிறார்" என்றார் சிவபெருமான்.

"நான் உங்களைக் கேட்டதற்கு அவர் பதில் சொன்னது நியாயமா?"

"உமையே! சைகீசவ்யர் பற்றுக்களை அறவே துறந்த யோகி. கள்ளங் கபடம் இல்லாத தூய உள்ளம் உடையவர். நம்மீது பேரன்பு கொண்டவர். அவர் சொன்னதைப் பொறுத்துக்கொள். நீயும் அவருக்கு அருள் செய்து காக்கவேண்டும்" என்றார் சிவபெருமான்.

"பற்றற்றவராக ஒருவர் இருக்க முடியுமா? அவரைப் பார்க்கவேண்டுமே என்றாள் உமை. உடனே சிவபெருமானும் உமையம்மையும் சைகீசவ்யர் குடிலை அடைந்தார்கள். அங்கே துறவி சைகீசவ்யர் கந்தல் துணி ஒன்றை ஊசி நூலால் தைத்துக்கொண்டிருந்தார். சிவபெருமானும் உமையம்மையும் தன் குடிலுக்கு வந்திருப்பதை அறிந்த அவர், அவர்களைப் பணிவுடன் வரவேற்று வழிபாடு செய்தார். பிறகு அவர் அந்தக் கந்தல் துணியை எடுத்துத் தைக்கத் தொடங்கினார்.

அவரைப் பார்த்துச் சிவபெருமான் "சைகீசவ்யரே! உமக்கு என்ன வரம் வேண்டுமோ தயங்காமல் கேளும்? தருகிறேன்" என்றார். "இறைவா! தங்கள் அருளால் எனக்கு எல்லாமே கிடைத்து உள்ளன. இனி எனக்குத் தேவையானது எதுவும் இல்லை. என்னிடம் இருக்கும் பொருள்களைக் கொண்டே மகிழ்ச்சியுடன் வாழ்கிறேன். எனக்கு எந்த வரமும் வேண்டாம்" என்று மறுத்தார் அவர்.

இதைக் கேட்டுச் சிரித்த சிவபெருமான், "நீர் ஏதேனும் வரம் என்னிடமிருந்து வாங்கியே ஆகவேண்டும். மிகவும் உயர்ந்ததாக உள்ள எந்த வரம் வேண்டுமானாலும் கேள். தருகிறேன்" என்றார்.

"இறைவா! எனக்கு என்ன குறை உள்ளது? எந்த வரமும் வேண்டாம்" என்று பணிவோடு மறுத்தார் சைகீசவ்யர். அவரின் பற்றற்ற தன்மையை அறிந்துகொண்ட உமையம்மை அவரை வாழ்த்திவிட்டுச் சிவபெருமானுடன் கைலாயம் சென்றார்.

*முடிந்த பிரச்சினைகளுக்காக வருந்தாமல் வரும் காலத்தை துணிந்து எதிர்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டும் எனும் சொல்லிற் பாடல் வந்ததுவென் கற்பனையி லஃதை வேண்டுமுல கோரறிய வென்றே வரைந்தனனே கவிதையது வென்றே

– திரு ஆ. விநாயகமூர்த்தி அவர்கள் –

அன்பு வழியே நடக்க வேண்டும்
ஆண்டவனை யாம்துதிக்க வேண்டும்
இன்சொ லுயர் வாயுரைக்க வேண்டும்
ஈன்றவரை யும்மதிக்க வேண்டும்
உன்கடமை நீபுரிய வேண்டும்
ஊர்க்குயர்வை நீகொடுக்க வேண்டும்
என்ற மன முந்தனுக்கு வேண்டும்
எங்களுக்கு மிந்த மனம் வேண்டும்.

ஒற்றுமையு மெங்களுக்கு வேண்டும்
ஒருவரையும் யாம் பகைக்கா தென்றும்
மற்றவர்க்காய் வாழ்ந்திடவும் வேண்டும்
மனிதருளுந் தேவருள ரென்றே
கற்றவரே புகழ்ந்துரைக்க வேண்டும்
கபடமும் பொய் சூதுகளு ணீங்கப்
பெற்றிடுவோ முள்ள மதாற்தூய
புண்ணியவா னென்ற பெரும்பேறே.

புண்ணியவா னென்ற பெரும்பேறு
பூமியிலே யாம் பெறவும் வேண்டும்
கண்ணியமுங் கடமை கட்டுப்பாடும்
காணவுயர் வானசெயல் செய்தாற்
கண்ணை யிமை காப்பதனைய போலக்
கடவு ளௌமைக் காத்திடுவா னெண்ணு
மண்ணிதனைப் போற்பொறு மையாளன்
மானமுடை யோனெனவும் வாழு.

*பிறர் முதுகுக்குப் பின்னால் நாம் செய்யவேண்டிய காரியம் தட்டிக்கொடுப்பது மட்டுமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வ மெனுஞ் சிறப்பெமக்கு வேண்டும்
சேவைசெயு மெண்ணமதும் வேண்டும்
கல்மனது மாறிவர வேண்டும்
கடமைவழு வாதிருக்க வேண்டும்
சொல்வதனைச் செய்துவர வேண்டும்
சோம்பலையே யாம்மறக்க வேண்டும்
நல்லனவே செய்துவர வேண்டும்
நாணயமே யிங்கெவர்க்குந் தேவை.

தருமமெனுஞ் சொல்லறிய வேண்டும்
தன்நலத்தை நாம் மறக்க வேண்டும்
கருமமதிற் கண்ணிருக்க வேண்டும்
கற்புநெறி தவறுவதுந் தீதே
வருந்துய ரெம் வாழ்வியலைக் கண்டு
வருந்துவதை யாம் மறக்க வேண்டும்
பெருந்தவறு யான் பெரியோ னென்று
பேசுவது மெண்ணுவதுந் தானே.

கள்ளமிலா உள்ளமதும் வேண்டும்
கருணைபொறை யறிவுதிறன் வேண்டும்
உள்ளவரை உழைத்துயர வேண்டும்
உண்மையதை யாமுரைக்க வேண்டும்
வள்ளலென வாழ்ந்துவர வேண்டும்
வாழ்விலிவை வேண்டு மிதனோடு
உள்ளமுடல் உறுதிபெற வேண்டும்
உத்தமனா யுலவநினைப் போர்க்கே.

## இறைவனையே காக்க வைத்தவன்

புண்டரிகன் என்பவன் தன் பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்வதையே வாழ்க்கையின் பெரும் பேறாகக் கொண்டிருந்தான். இப்படியே பல ஆண்டுகள் கழிந்தன. அவன் பெருமை விண்ணுலகம் வரை பரவியது. பெற்றோர்களுக்கு அவன் செய்யும் பணிவிடைகளைக் கண்டு மகிழ்ந்த பாண்டுரங்கன் அவனுக்குக் காட்சி தந்தார்.

அப்பொழுது அவன் தன் பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தான். அதை விட்டுவிட்டு இறைவனைக் காண அவன் உள்ளம் துணியவில்லை. "இறைவா! சற்று நேரம் எனக்காகப் பொறுத்திருங்கள். என் கடமைகளை முடித்துவிட்டு விரைவில் வந்துவிடுகிறேன். என்னை மன்னியுங்கள்" என்றான். அவன். ஒரு செங்கல்லை அவர் பக்கம் தள்ளினான். பெற்றோர் பணிவிடைகளை அவன் முடித்துவிட்டு வரும்வரையில் இறைவன் அந்தச் செங்கல்லின் மேல் நின்றபடியே இருந்தார்.

*உன் மனச்சாட்சிதான் உனக்கு ஆசான். அதைவிட வேறு ஆசானில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத வாராந்த நிகழ்வுகள்

07.04.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "முருகனின் பெருமை"

வழங்குபவர் :- திருமதி விஜயகுமாரி முருகேசபிள்ளை அவர்கள்

[ஆசிரிய ஆலோசகர்]

---

14.04.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

21.04.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "மகாபாரதம்" **(தொடர்)**

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

[ஆசிரியர்]

---

28.04.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் சித்திரை மாத வெளியீடு

**304ஆவது மலர்**

வெளியீட்டுரை :- திரு க. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள்

[இளை. கிராம சேவகர்]

மதிப்பீட்டுரை :- திருமதி தவமலர் சுரேந்திரநாதன் அவர்கள்

[இளை. அதிபர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: DOP/NEWS/103/2023

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org